# எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல் 09 அதிர்வு 102 மார்கழி 2025 editor@ethiroli.com தொ.பே:1800 960 162



Budget Friendly
Home Improvements Pty Ltd
Quality Renovation Work
0400 287 198




## ஏதிலிகளின் இளைய தலைமைத்துவம் யுவலக்ஷயன் கண்ணனுக்கு விருது









ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை

BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com

GRACE GROCERY
FRESH FINDS GREAT DEALS
INDIAN AND SRILANKAN

# GRACE GROCERY

INDIAN AND SRILANKAN GROCERY

**Our Current Location**

Casey Central (Narre Warren) and Clyde North next to ALDI/Bunnings

**Our New Locations Opening Soon**

- Mambourin Shopping Centre (Mambourin) - 2025 / • Farm Gate Local (Clyde) - 2025
- Ramlegh Shopping Centre (Clyde) - 2025 / • Orana Shopping Centre (Clyde) - 2026



# பேரிடர் காலத்துப் பேச்சுகள்

● கருணாகரன்

இலங்கையில் மிகப் பெரிய இயற்கை அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. 700 பேருக்கு மேல் இறந்து விட்டனர். பல ஆயிரம் வீடுகள் முழுதாகவே அழிந்து விட்டன. சில கிராமங்களைக் காணவே இல்லை. நாட்டின் உட்கட்டமைப்புப் பல இடங்களிலும் சேதமடைந்திருக்கிறது. இந்தியா, ஜப்பான், அமெரிக்கா, நோர்வே, ஆஸ்திரேலியா, சீனா, ஐக்கிய அரசு இராஜ்ஜியம், பாகிஸ்தான், பங்களாதேஷ் எனப் பல நாடுகள் உதவிப் பொருட்களையும் நிதியையும் அளித்துள்ளன. இந்தியாவும் பாகிஸ்தானும் ஐக்கிய அரசு இராச்சியமும் மீட்புப் பணிகளில் நேரடியாகவே ஈடுபட்டன. உட்கட்டமைப்புகளைச் சீரமைக்கும் பணியில் இந்தியா ஈடுபட்டு வருகிறது. ஐ.நா. உட்படப் பல்வேறு உலக அமைப்புகளும் இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கான ஆதரவை வழங்குவதாக உறுதியளித்துள்ளன. முதற்கட்டமாக நிதி உதவியையும் அளித்துள்ளன. மேலும் பலநாடுகளும் அமைப்புகளும் பல்வேறு விதமான உதவிகளையும் அளிக்கும் என எதிர்பார்க்க முடிகிறது.

2004 இல் சுனாமி இலங்கையைத் தாக்கியது. 20 ஆண்டுகளில் இன்னொரு பேரனர்த்தம். இடையில் புவிநடுக்கம் பற்றி பதிவுகளும் உள்ளன. அப்படியென்றால், ஜப்பான், பங்களாதேஷ் போல இலங்கையும் அனர்த்த வியூகத்துக்குள் சிக்கியிருக்கிறதா? ஏற்கனவே உள்நாட்டு யுத்தத்தினால் பொருளாதார ரீதியாகவும் துறைசார் வளர்ச்சிகளிலும் நெருக்கடியையும் பின்னடைவையும் சந்தித்திருக்கிறது நாடு. இதற்குள் இயற்கை அனர்த்தங்களும் என்றால...? சுனாமி, தற்போது ஏற்பட்டுள்ள 'பித்வா' சூறாவளி அனர்த்தங்களை விட கடந்த ஆண்டுகளில் மண்சரிவுகளும் வெள்ள அனர்த்தமும் நிகழ்ந்துள்ளன. கடந்த 50 ஆண்டுகள் இலங்கை வரலாற்றின் இயற்கை அனர்த்தங்களைப் பட்டியலிட்டால், முன்னர் குறிப்பிட்டுள்ளதைப்போல, இயற்கை அனர்த்த ஆபத்தை எதிர்கொள்ளும் ஒரு நாடாகவே தோன்றுகிறது. என்பதால்தான், ஆண்டுதோறும் அனர்த்த நிவாரணம் வழங்க வேண்டிய நிலை தொடர்கிறது.

அப்படியென்றால், இதற்கான முன்னெச்சரிக்கை, முன்னேற்பாடு, அனர்த்தத்தை எதிர்கொள்ளத்தக்க வகையிலான கட்டமைப்புகளில் மறுசீரமைப்பு, புதிய திட்டங்கள் எனப் பலவும் வேண்டியிருக்கிறது. நாடு இதை நோக்கி ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

தற்போது ஆட்சியிலிருக்கும் தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கத்தின் செயற்பாடுகள் ஓரளவு வெளியுலகுக்குத் திருப்தியை அளித்துள்ளன என்று சொல்லலாம். ஊழலற்ற நிர்வாகமும் வினைத்திறனான பணிகளும் வெளியுலகின் கவனத்தை ஈர்த்துள்ளன. இளைய தலைமுறையினரே அதிகமாக ஆட்சி அதிகாரத்தில் இருப்பதுடன், அனைத்துப் பிராந்தியங்களோடும் சிநேகபூர்வ உறவை அநுரகுமார திஸநாயக்க அரசாங்கம் மேற்கொள்கிறது என்பதால், மீள்கட்டுமானப்பணிகளுக்கான ஆதரவும் உதவியும் ஒத்துழைப்பும் ஓரளவுக்குக் கிடைக்கும் என்று அரசியல் நோக்கர்களும் மனிதநேயப் பணியாளர்களும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான ஒரு அனர்த்தம் மற்றும் மீட்புப் பணிச் சூழலில் இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கும் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணிக்கும் இடையில் சிநேகபூர்வமான சந்திப்பு ஒன்று கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் நடந்திருக்கிறது. 'எதிர்காலத்தில் தமிழ்த்தேசிய அரசியலை எந்த அடிப்படையில் முன்னெடுப்பது? தமிழ்த்தேசியத் தரப்புகள் எவ்வாறு செயற்படுவது?' என்ற அடிப்படையிலேயே இந்தச் சந்திப்பு நடந்ததாக, சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழரசுக் கட்சியின் செயலாளர் எம். ஏ. சுமந்திரனும், ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான சுரேஸ்பிரேமச்சந்திரனும் தெரிவித்துள்ளனர்.

நாடு பேரிடர்ப்பட்டிருக்கும்போது, உலகம் பேரிடர் மீட்புப் பணியில் இறங்கியிருக்கும்போது, வடக்கு- கிழக்குப் பிரதேசங்களில் கூட அரச நிர்வாகமும் (உத்தியோகத்தர்களும் படைத்தரப்பும்) தொண்டு அமைப்புகளும் பேரிடர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருக்கும்போது, பொறுப்பான தமிழ்க் கட்சிகள் அதைப் பற்றி ஒரு சொல்லும் வெளியே பேசாதிருப்பதும் கலந்து பேசாதிருப்பதும் கவலைக்குரியது் கண்டனத்துக்குரியது. 'பேரிடர் நிகழ்ந்த பிரதேசத்துக்கு நேரில் சென்றிருக்கிறோம், அங்குள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொண்டிருக்கிறோம்' என்று சுமந்திரனோ தமிழரசுக் கட்சியோ கூறலாம். தமிழரசுக் கட்சி அங்கே சென்றுள்ளது என்பது உண்மையே.

தமிழரசுக் கட்சி பாதிக்கப்பட்ட பிரதேசத்துக்குச் சென்றது எதிர்க்கட்சிகளின் கூட்டணியுடன். அந்த எதிர்க்கட்சிகளின் கூட்டணி, கடுமையான - மிகத் தீவிரமான இனவாதத் தரப்புகளையும் உள்ளடக்கியது. அவர்கள் அரசாங்கத்தை விமர்சிப்பதையே முதன்மையாகக் கொண்ட தரப்பினர். அவர்களுடைய பயணத்தின் நோக்கமும் பெருமளவுக்கும் அதுதான். அந்தக் கூட்டுடன் செல்வதன் மூலம் மேலும் நாம் தனிமைப்படுத்தப்படுவதற்கும் கறுப்பு ஆடுகள் என அடையாளப்படுத்தப்படுவதற்குமே வாய்ப்பாகும். ஆனால், அதற்கும் அப்பால், இந்தச் சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்ட மக்களோடும் மீட்புப் பணியில் ஈடுபடும் அரசாங்கத்தோடும் இணைந்து செயற்படுவதும் அதைப் பற்றிச் சிந்திப்பதுமே அவசியம். இதில் தமிழரசுக் கட்சி மட்டுமல்ல, ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியும் இணைந்து பயணித்திருக்க வேண்டும். இப்பொழுது கூடக் காலம் செல்லவில்லை.

(05ஆம் பக்கம் பார்க்க)

# பேரிடர் காலத்துப் பேச்சுகள்

*(04ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*அப்படிச் செய்யும்போது, மக்களோடும் அரசாங்கத்தோடும் ஒரு சிநேகபூர்வமான உறவும் உறவாடலும் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகரிக்கும். 2005 இல் மலையகத்தில் பேரிடர் ஏற்பட்டபோது விடுதலைப்புலிகள் இயக்கத்தினரும் அவர்களுடைய வழிப்படுத்தலின் கீழ், வடக்கு- கிழக்கிலுள்ள கூட்டுறவு அமைப்புகள், விவசாய அமைப்புகள், வர்த்தகர் சங்கங்கள் போன்றவையும் இணைந்து மலையகத்துக்கு நிவாரணப் பொருட்களை எடுத்துச் சென்றிருந்தன. இவ்வாறான செயற்பாடுகள் நெருக்கத்தை கூட்டும். இடைவெளியைக் குறைக்கும். புரிந்துணர்வை ஏற்படுத்தும்.*

*இனப்பிரச்சினைக்கான தீர்வாக இருக்கலாம், மாகாண சபைகளை வலுவாக்கம் செய்வதாக இருக்கலாம், தமிழ் பேசும் மக்களின் முன்னேற்றத்துக்கான அபிவிருத்தித்திட்டங்களாக இருக்கலாம், எல்லாவற்றுக்கும் அரசாங்கத்தின் ஒத்துழைப்பும் சிங்களச் சமூகத்தின் ஆதரவும் வேண்டும். இவற்றுக்குப் புரிந்துணர்வு மிகமிக அவசியமானது. வரலாற்றில் எத்தனையோ தடவை நாம் நல்லெண்ணத்தைக் காட்டியுள்ளோம். எவ்வளவோ தடவை புரிந்துணர்வுடன் நடந்து கொண்டுள்ளோம். ஆபத்து நேரங்களிலும் இடர்க்காலங்களிலும் மட்டும்தான் அரசாங்கமும் சிங்கள மக்களும் இனவாதத்தைப் பற்றிச் சிந்திப்பதைக் குறைக்கிறார்கள். அல்லது அப்போதுதான் இனவாதப் பேச்சுகள் தணிகின்றன. நிலைமை சீரடைந்ததும் மீண்டும் பழைய கதைதான். வேதாளம் முருங்கையில் ஏறிவிடும் என்று யாரும் சொல்லக் கூடும்.*

*இதை நாம் மறுப்பதற்கில்லை. ஆனாலும் நாம் தொடர்ந்தும் இதைச் செய்தே தீர வேண்டும். அரசியல் ரீதியான நெருக்கடியும் பாதிப்பும் கொண்ட மக்களாகத் தமிழ்பேசும் சமூகத்தினர் இருக்கும் வரையில், எத்தனை தடவையும் முயற்சித்தே தீர வேண்டும். அதுதான் அரசியல் விதியாகும். அந்த விதியை மீறும்போதும் அதைப் புரிந்து கொள்ளாமல் விடும்போதும் இரட்டைப் பாதிப்பைச் சந்திக்க நேரும்.*

*ஏனெனில், சமாதானத்துக்கான பயணமும் தீர்வுக்கான முயற்சிகளும் (வேலைகளும்) நீண்டவை, பலவிதமானவை. நாம் எப்போதும் வலியுறுத்துவதைப்போல, யுத்தத்தைச் செய்வது சுலபம். சமாதானத்தை எட்டுவது கடினம். யுத்தத்தில் தீர்மானங்களைத் துணிந்து எடுத்து விடலாம். சமாதானத்தில் அப்படி எடுக்கவே முடியாது. யுத்தத்தில் கட்டளையே மேலோங்கியிருக்கும். சமாதானத்தில் பரிந்துரைகளும் விவாதங்களுமே மேலோங்கும். யுத்தம் இராணுவ ஒழுங்குக்குட்பட்டது. சமாதானம், ஜனநாயக மயப்பட்டது. இராணுவச் செயற்பாட்டில் விவாதங்களுக்கு இடமே இல்லை. சமாதான முன்னெடுப்பில் விவாதங்களே மையம். யுத்தம் ஒற்றைக் குரலுடையது. சமாதானம் பல குரல்களால் ஆனது.*

*அதனால், எந்தெந்தச் சந்தர்ப்பங்களை நாம் எமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள முடியுமோ, அத்தனையையும் மிகக் கவனமாகவும் பொறுப்பாகவும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அரசாங்கத்தையும் சிங்கள மக்களையும் புறநிலையில் வைத்துக் கொண்டு, தீர்வைப் பெறவும் முடியாது. உரிமைகளை எட்டவும் இயலாது.*

*ஆனால், தமிழ்த்தேசியக் கட்சிகள் அனைத்தும் இந்த மாதிரித் தீர்வுக்கான சிந்தனையை விரிவாக்கம் செய்வதை விடுத்து, தேசிய மக்கள் சக்தியை வடக்குக் கிழக்கில் எப்படி முடக்குவது என்றே சிந்திக்கின்றன. தேசிய மக்கள் சக்தியைத் தந்திரோபாய ரீதியில் கையாள்வதும் ஒரு வகையில் அதை முடக்குவதுதான். யானையை விரட்டுவது ஒருவகை. யானையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அதைக் கொண்டு வேலை வாங்குவது இன்னொரு வகை. இங்கே யானை என்பதை யாரும் ஐக்கிய தேசியக் கட்சியோடும் ரணில் விக்கிரமசிங்கவோடும் தயவு செய்து தொடர்புபடுத்த வேண்டாம். அது வேறு. இது வேறு.*

*ஆக, நாம் உலகமே இடருக்காக - இடர் மீட்புக்காகத் திரண்டிருக்கும்போது, நாம் நடத்துகின்ற சந்திப்புகளும் அங்கே பேசுகின்ற விடயங்களும் ஊடகங்களில் வெளிப்படுத்தப்படுகின்ற செய்திகளும் எதிர்மறைச் சித்திரத்தை வழங்கக் கூடாது. இலங்கை அரசாங்கத்தையும் சிங்கள மக்களையும்தான் விடுவோம். உலகமே இதை - தமிழ்த்தேசியத் தரப்பினரின் இந்தப் பாராமுகத்தை எப்படி நோக்கும்? வடக்கிலும் பாதிப்பு என்று அரசாங்கம் பெருந்தொகை நிதியை ஒதுக்கியுள்ளது. அமெரிக்க விமானம் அதற்காக நிவாரணப் பொருட்களோடு பலாலியில் தரையிறங்கியுள்ளது. இந்தியா தன்னுடைய இராணுவத்தையும் பால நிர்மாணிப்புக்கான தளவாடங்களையும் அனுப்பி வைத்துள்ளது. அதற்கான பணிகள் கிளிநொச்சியில் நடந்து கொண்டிருக்கின்றன.*

*இப்படியெல்லாம் இருக்கும்போது தமிழ்த்தலைவர்கள் அரசியற் கதைகளைப் பேசுகிறார்கள். அவை பேசப்பட வேண்டியதுதான். ஆனால், அது எப்போது, எவ்வாறான சந்தர்ப்பத்தில் என்பதுதான் கவனத்திற்குரியது.*

*தமிழரசுக் கட்சியும் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியும் அண்மைக்காலமாக ஒரு இடையூடாட்ட உறவில்தான் உள்ளன. அண்மையில் நடந்த உத்தியோகபூர்வச் சந்திப்புக்கு முன்பு. இந்தத் தரப்புகள் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியை அமைப்பதற்கானபுரிந்துணர்வில் இணக்கம் கண்டிருந்தன. இந்த இணக்கம், ஜனநாயகத் தமிழ்த்தேசியக்கூட்டணி நடத்திவரும் மாகாணசபை முறைமையை வலுப்படுத்துவதற்கான மக்கள்அரங்குகளில் தமிழரசுக் கட்சியும் நட்பின் அடிப்படையில் கலந்து கொள்வதற்கான கதவுகளைத் திறந்தது.*

*ஆக இதை படிப்படியாக உருவாகி வந்த ஒரு வளர்ச்சி நிலை என்றே சொல்லலாம். ஆனால்அடுத்த கட்டத்துக்கு இது வளர்ச்சியடைவதில் அல்லது நகர்வதில் பல இடர்ப்பாடுகளும்சிக்கல்களும் உண்டு. அவை கட்சி நலன் - மக்கள் நலன் - பிரமுகர் அல்லது அரசியல்தலைவர்களின் நலன் என்ற முக்கோண வலைப் பின்னல்களுக்குள் சிக்குண்டுள்ளது. இதைக்குறித்துப் பின்னர் பார்க்கலாம்.*

*அதற்கு முன், இந்தச் சந்திப்பு மீண்டும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை உயிர்ப்பிக்குமா? என்று சிலரிடம் ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்த் தரப்பின் பலத்தையும் அதற்கான ஐக்கியத்தையும் விரும்புவோர் இத்தகைய எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளனர். அவர்களுக்கு இது உள்ளூர மகிழ்ச்சியை அளிக்கிறது.*

*அப்படியென்றால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கடந்த காலத்தை நியாயமான முறையில்பரிசீலனை செய்ய வேண்டும். ஏறக்குறைய அது ஒரு போஸ்மோட்டம்தான். இதைச்செய்வதற்கு திறந்த மனதுடன் ஒவ்வொரு தரப்பும் தம்மை விமர்சனத்துக்குள்ளாக்கவேண்டும். அதற்குத் துணிய வேண்டும். ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவதும் ஒரு தரப்பின்மீது மறுதரப்பு பழி சுமத்துவதையும் நிறுத்த வேண்டும். மக்கள் நலனை முன்னிறுத்தினால்இது எளிது. இல்லையென்றால் கடிதினம் கடிது.*

*ஆனால், அப்படியான ஒரு அவசியம் இன்று தமிழ் அரசியற் தரப்பினருக்கு ஏற்பட்டுள்ளது.*

*தேசிய மக்கள் சக்தியின் எழுச்சியும் அது நாடு முழுவதிலும் பெற்ற வெற்றியும் தமிழ்ப் பரப்பில்அதற்கு உருவாகியுள்ள செல்வாக்கு மண்டலமும் வடக்கு - கிழக்கில் தேசிய மக்கள் சக்திநிலை கொண்டுள்ள விதமும் தமிழ் அரசியற் தரப்புகளுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன. இந்த நெருக்கடி தனியே தமிழ்த்தேசியத்தை அடையாளமாகக் கொண்டிருக்கும் கட்சிகளுக்கு மட்டுமல்ல, இதுவரையிலும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டஈ.பி.டி.பி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி போன்றவற்றுக்கும் உள்ளது. ஏன் மலையகக் கட்சிகள், முஸ்லிம் கட்சிகளுக்கும் உண்டு.*

*தேசிய மக்கள் சக்தி இன அடையாளக் கட்சிகளைச் சவாலுக்குட்படுத்தியுள்ளது. அதன்மீதும் இனரீதியான பார்வை இருந்தாலும் நடைமுறையில் இன அடையாள அரசியலை அதுசவாலுக்குட்படுத்தியுள்ளது என்பதை மறுக்க முடியாது. இந்த நிலையின் வெம்மை தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகளை எச்சரிக்கை அடைய வைத்துள்ளது. இப்பொழுது தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகள் இரண்டு வகையான நெருக்கடிகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கிறது.*

*1. தேசிய மக்கள் சக்தியை, அதனுடைய அரசியல் நகர்வுகளை எதிர்கொள்ளவேண்டியிருப்பது. தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் இருப்பதால் அது இரண்டு மடங்குபலமானதாக உள்ளது. மட்டுமல்ல, அதை எளிதிற் குற்றம் சாட்டுவதற்கு முடியாத ஒருநிலையும் உண்டு. அதாவது. கடந்த கால ஆட்சியாளர்களைப்போல ஆட்சித் தவறுகள், அதிகாரத் தவறுகள், போர்க்குற்றம் போன்ற குற்றச்சாட்டுகளை முன்னிறுத்தி அதைஎதிர்க்க முடியாது. மட்டுமல்ல, அதை நேரடி இனவாதச் சக்தியாக இப்பொழுதுஅடையாளப்படுத்தவும் முடியாது.*

*கடந்த கால ஜே.வி.பி.க்கு அப்படியான ஒரு அடையாளத்தைச் சொல்ல முயற்சிக்கலாம். ஆனால், அதையும் தேசிய மக்கள் சக்தி முறியடித்துள்ளது என்றே சொல்ல வேண்டும். எப்படியென்றால், 2010 க்கு முந்திய ஜே.வி.பி. வேறு. இன்றைய ஜே.வி.பி. வேறு என்பதைஅது நிறுவி வருகிறது. முந்திய ஜே.வி.பி.யானது இந்திய எதிர்ப்பு, அமெரிக்க எதிர்ப்பு, வடக்கு- கிழக்கு இணைப்புக்கான எதிர்ப்பு, மாகாணசபை மீதான தயக்கம் போன்றவிடயங்களுடன் சம்பந்தப்பட்டது.*

*இன்றைய தேசிய மக்கள் சக்தி, இவற்றைச் சாதகமான முறையில் கையாளும் ஒருநிலைக்கு வளர்ச்சி அடைந்துள்ளது. அல்லது அதற்கு அமையத் தன்னை மாற்றிக்கொண்டுள்ளது. என்பதால், அதனை இன அடையாளத்துடன் அல்லது இனவாதஅடையாளத்துடன் சம்பந்தப்படுத்த முடியாத அளவுக்கு அது தன்னை வேறுபடுத்திக்காட்டுவதற்கு முயற்சிக்கிறது. இதில் அது கணிசமான அளவுக்கு முன்னேறியும் உள்ளது. என்பதால்தான் அது வடக்கு-கிழக்கிலும் மலையகத்திலும் ஏனைய தேசிய அரசியற்கட்சிகள் பெற முடியாத இடத்தைப் பெற முடிந்தது. குறிப்பாக இளைய தலைமுறை தேசிய மக்கள் சக்தியின் பக்கம் ஈர்ப்புக்குள்ளாகி வருகின்றனர். இந்தநிலையில் தேசிய மக்கள் சக்தியை வழமையான தேசிய அரசியற் சக்திகளோடு (சு.க, ஐ.தே.க, பொதுஜன பெரமுன) ஒப்பிட்டு அரசியல் செய்யவும் முடியாது. அவற்றை எதிர்கொண்டதைப்போல தேசிய மக்கள் சக்தியை எதிர்கொள்ளவும் முடியாது.*

*எனவே அதற்கு ஒரு புதிய சிந்தனை முறையும்* (New Thinking method) *அணுகுமுறையும்* (Approach) *வேலைத்திட்டமும்* (Work plan) *வேண்டும். இவற்றைவகுத்துக் கொள்ளாமல் தேசிய மக்கள் சக்தியை எதிர்கொள்வது கடினம். ஆகவேகடந்த காலத்தில் இவை மேற்கொண்ட அரசியல் முறைமையையும் இவை பின்பற்றியஅரசியற் கருத்துநிலை அல்லது கொள்கையையும் இனியும் அப்படியே தொடரமுடியாது. சுருக்கமாகச் சொன்னால், ஜே.வி.பி.யானது எப்படித் தன்னைப் புதியசூழலுக்கு ஏற்றமாதிரி வடிவமைப்புச் செய்து கொண்டதோ, அவ்வாறு இவையும் தம்மைவடிவமைக்க வேண்டியுள்ளது.*

*2. இந்தத் தரப்புகள் இதுவரையில் எட்டிய - சாதித்த - அரசியல் வெற்றிகள்(அடைவுகள்) என்ன என்ற கேள்வி மக்களிடம் உருவாகியுள்ளது. இன அடிப்படையில்தமது அடையாளத்துக்காகவும் கடந்த கால ஆட்சித்தரப்புகளின் இன ரீதியானநெருக்கடிகளை எதிர்கொள்வதற்காகவும் மக்கள் இந்தத் தரப்புகளைநிபந்தனையின்றி ஆதரித்து வந்தனர். அதை இந்தத் தரப்புகள் தமக்கான வாய்ப்பாகவும் கையாண்டு வந்தன. ஆனால், இப்பொழுது உருவாகியிருக்கும் அரசியற் சூழல் வேறு. என்பதால் இவை புதிய அரசியல் அடையாளங்களை உருவாக்கி, அதை மக்களிடம்காட்ட வேண்டியுள்ளது. அப்படிக் காட்டவில்லை என்றால், மக்கள் இவற்றைப்பொருட்படுத்த மாட்டார்கள். மக்களுடைய உணர்வுத்தளமும் வாழ்க்கைச் சவால்களும்பிரச்சினைகளும் தேவைகளும் வேறாக விட்டன. அதைப் புரிந்து கொண்டு அரசியல்முன்னெடுப்புகளைச் செய் வேண்டிய தேவை - அவசியம் இந்தத் தரப்புகளுக்கு வரலாற்று நிர்ப்பந்தமாகியுள்ளது.*

*இந்தப் பின்னணியில்தான் நாம், தமிழரசுக் கட்சி - ஜனநாயகத் தமிழ்த் தேசியக்கூட்டணியின் சந்திப்பையும் அதனுடைய அடுத்த கட்ட நகர்வையும் இதைக்குறித்துஇவற்றின் ஆதரவாளர்கள் கொள்ளும் கனவையும் (விருப்பத்தையும்) நாம் பார்க்க வேண்டும்.*

*இப்பொழுதும் தமிழ்த்தேசியச் சக்திகளிடம் தடுமாற்றங்களே அதிகமாக உண்டு. இதற்குக்காரணம், மறுபரிசீலனைக்கான சிந்தனையும் உளநிலையும் இவற்றிடம் இன்னும் ஏற்படாதிருப்தேயாகும். ஏராளமாக விளைந்து போயிருக்கும் தமிழ்த்தேசிய அரசியற்சக்திகளில் ஒன்றிற் கூட இன்னும் புதிய அடையாளத்தை நோக்கிய பயணச் சுவட்டைக் காணமுடியவில்லை. இதனால்தான் பட்டும் படாமலும் முட்டியும் முட்டாமலும் ஒரு மாதிரியாகஇவை சந்திப்புகளைச் செய்கின்றன் பேசுகின்றன.*

*இப்பொழுது தமிழ்த்தேசியத் தரப்புகள் மும்முனையில் - மூன்று தரப்புகளாக உள்ளன.*

*1. கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த்தேசியப் பேரவை. இதில் வடமாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி, ஐங்கரநேசனின் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம், சிவாஜிலிங்கம் - ஸ்ரீகாந்தா இரட்டையர்களின்தமிழ்த்தேசியக் கட்சி மற்றும் சரவணபவன், தவராஜா, அருந்தவபாலன் உள்ளிட்ட ஒருதரப்பு.*

*2. புளொட், ஈ.பி.ஆர்.எல். எப், ரெலோ, சமத்துவக் கட்சி, ஜனநாயகப் போராளிகள்ஆகியவை இணைந்துள்ள ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி.*

*3. இலங்கைத் தமிழரசுக் கட்சி.*

*தனிக்கட்சியாக இருந்தாலும் தற்போது தமிழ்ப்பரப்பில் வலுவான சக்தியாக இருப்பதுஇலங்கைத் தமிழரசுக் கட்சியே. ஏனைய கட்சிகளுக்கு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் தலா ஒன்று என்ற அளவிலேயே உண்டு. ஆனால், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு வடக்கு- கிழக்கு முழுவதிலும் உள்ளூராட்சி சபைகளில் செல்வாக்குண்டு.*

*இந்த மூன்று சக்திகளும் இடைவெளிகளுடன் கூடிய தமிழ்த்தேசிய அரசியலைப் பிரகடனம்செய்துள்ளன. அரசியல் தீர்வு, மக்களுடனான அணுமுறை, தமது அரசியலை முன்னெடுக்கும் விதம், அரசியற் கொள்கை போன்றவற்றில் துலக்கமான வேறுபாடுகளைக் கொண்டுள்ளன.*

*இவை ஒன்றும் புதியவையும் இல்லை. கடந்த காலத்தில் தூக்கிச் சுமந்த அதே பழையசரக்குத்தான். ஆனால், இவற்றை இன்னும் சுமந்து கொண்டேயுள்ளன. பாரம்பரிய அரசியற்சக்திகளையும் பாரம்பரிய அரசியற் சித்தாந்தங்களையும் மீள்பரிசீலனை செய்யுமாறுவரலாறும் சூழலும் வற்புறுத்துகின்றன் நிபந்தனை செய்கின்றன. இருந்த போதும்அதைப்பற்றிய எந்தவிதமான உணர்வுமின்றி, அதே சுமைகளோடு பிடிவாதம் செய்துகொண்டிருப்பதோடு, ஒன்றோடு ஒன்று முரண்பட்டுக் கொண்டும் உள்ளன. சிலவேளைகளில்தமக்குள்ளேயே முரண்பட்டுக் கொள்வதும் உண்டு. இது மக்களுக்குச் சலிப்பையும்ஏமாற்றத்தையுமே அளிக்கின்றன.*

*தேசிய மக்கள் சக்தி ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்கு முன், தமிழ்பேசும் சமூகங்களிடம் ஒரு கூட்டுக் கோரிக்கை இருந்தது, தமது அரசியற் சக்தி திரண்டிருக்க வேண்டும். அப்போதுதான் பலமானதாக இருக்கும் என்பதாக. அன்றைய ஆட்சியாளர்களைஎதிர்கொள்வதற்கு அப்படியான ஒரு திரண்ட சக்தியின் பலம் தேவையானதாகவும் இருந்தது.*

*இன்றைய நிலையில் அந்தத் திரட்சி - ஐக்கியம் - ஒற்றுமை - கூட்டணி - கூட்டமைப்புஎன்பதெல்லாம் போதுமானதல்ல. அதையும் கடந்து புதிய அரசியல், புதிய முன்னெடுப்பு, புதிய அணுகுமுறை, புதிய வேலைத்திட்டம் போன்றவையே தேவை.*

*ஆக, மக்களுடைய நலனுக்கான முறையில் யதார்த்த அரசியலை - உலகுடன் பொருத்தக்கூடிய முறையிலான நடைமுறை அரசியலைச் சிந்திக்க வேண்டும். அதுவே மெய்யானபலத்தை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு - விடுதலையை விரும்பும் சமூகத்துக்கு அளிக்கும். அதுவரையில் இவை வெறும் தேநீர்ச் செலவீனத்தையும் பத்திரிகை - இணையச்செய்திகளுக்கான இடத்தையுமே எடுக்கும். அதற்கு மேல் எதுவுமே இல்லை.*

*இது சற்றுக் கடுமையான விமர்சனம்தான். ஆனால், தவிர்க்க முடியாதது. தேவையானது.* ■

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:08 அதிர்வு: 102 மார்கழி 2025 தொ.பே:1800 960 162

## VCE பரீட்சை முடிவுகளும் விமர்சனங்களும்

இந்த நாட்டில் தமிழ் மொழி நிலைக்குமா என்பது போன்ற கேள்விகள் அவ்வப்போது எழுந்துகொண்டிருக்கும் நிலையில், விக்ரோரியாவில் VCE தமிழ்மொழிப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் புதியதோர் உற்சாகத்தைத் தந்திருக்கிறார்கள்.

விக்ரோரியத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக விடுக்கப்பட்டுள்ள அறிக்கைகளின் படி, 30 சத வீதமான மாணவர்கள் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருப்பதோடு, ஒரு மாணவர் 50க்கு 50 புள்ளிகளையும் பெற்றிருக்கிறார். அதேவேளை, பாரதி பள்ளியில் 36 சத வீதமான மாணவர்கள் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்றதோடு, ஒரு மாணவர் 50க்கு 49 புள்ளிகளைப் பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இச் செய்திகள், தமிழ் மொழியைப் படிக்கும் ஆர்வத்தை மேலும் தூண்டிவிடும் என்பதில் ஐயமில்லை.

“எமது சொந்த நாடுகளை விட்டு ஆஸ்திரேலியாவில் நாங்கள் குடியேறியபோதும், எமது அடையாளமாக உள்ள தமிழ் மொழியையும், எங்கள் கலாசாரத்தையும் நாங்கள் மறக்கவில்லை” என, ஊடகங்களில் வெளியான அறிக்கையொன்றில் விக்ரோரியத் தமிழ்ச் சங்கத் தமிழ்ப் பாடசாலை அதிபர் பரம் பரமநாதன் கருத்து வெளியிட்டுள்ளார்.

பாரதி பள்ளியின் நிறுவுநரும் அதிபருமான மாவை நித்தியானந்தன் அபிப்பிராயம் தெரிவிக்கையில், “1998 இல் VCE தமிழ் மொழிப் பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, மாணவர் தொகையும் பெறுபேறுகளும் தொடர்ந்து முன்னேறியே வந்துள்ளன. கடந்துபோன ஆண்டுகளிலும் பல மாணவர்கள் 50க்கு 50 உட்பட உயரிய புள்ளிகளைப் பெற்றிருக்கிறார்கள். இந்த ஆண்டின் பெறுபேறுகள், மாணவர் தொகை என்ற அளவில் ஒரு மகிழ்ச்சியான பாய்ச்சல் எனலாம். ஆனால், மாணவர் சாதனை என்பது எப்போதும் போலவே நன்றாகத் தான் உள்ளது. கடந்த காலத்தில் முன்னோடிகளாக இருந்த மாணவர்கள் சாதித்தவற்றை, இன்றைய சாதனைகள் ‘கிரகணமாகி’ மறைப்பது நன்மையானதல்ல. 40 புள்ளிகளுக்கு மேல் பெறுவோரின் சத வீதமென்பது, பாரதி பள்ளியில் எப்போதுமே உயர்வாகத்தான் இருந்துள்ளது. கடந்த ஆண்டு கூட, 32 சத வீதமாக இருந்தது. இந்த ஆண்டு 36 சத வீதத்துக்கு உயர்ந்திருக்கிறது.

“பரீட்சை எழுதுவது நாங்களல்ல. பாரதி பள்ளியில் எல்லா மாணவர்களையும் பாரபட்சமின்றித் தயாரித்து அனுப்புகிறோம். அவர்களில் சிலர், தமது சொந்த ஆர்வத்தால், ஆசிரியர்களிடமிருந்து இன்னும் மேலதிகமான உதவிகளைப் பெற்றுக்கொள்கிறார்கள். இவையெல்லாம், கட்டணமற்ற உதவிகளே.”

மாவை நித்தியானந்தன் மேலும் குறிப்பிட்டதாவது: “30 ஆண்டுகளின் முன்னர் VCEயில் தமிழ் மொழியைக் கொண்டு வருவதற்கு அர்ப்பணிப்பு மிக்க பல தமிழ் அன்பர்கள் அரும் பாடுபட்டார்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது. இக் குழுவில் அங்கம் வகிக்கும் பேற்றினை நானும் பெற்றிருந்தேன். தொடர்ச்சியான இந்த 30 ஆண்டுகளும் VCEயை அவதானித்து வந்ததோடு, நெருக்கமாக இணைந்தும் இருந்துள்ளேன்.

“பரீட்சையில் தோற்றிய எல்லா மாணவர்களையும் நாம் மதிக்க வேண்டும். கூடிய புள்ளி எடுத்தவர்களைப் பாராட்டுவதில் தவறில்லை. அதேவேளை, ஓரிருவரை மட்டும் சுற்றி நடக்கும் ஆரவாரங்களும் ஆர்ப்பரிப்புகளும் அளவுக்கு மீறும் போது, ஏனைய மாணவர்களில் சிலர் உளரீதியாகச் சோர்வடைவதைக் காண்கிறோம். தமிழ் படித்த மாணவர்களுக்கு இது நிகழக் கூடாதது.”

தமிழர் நலனுக்காக ஆர்வமுடன் செயற்படும், பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு அன்பர் பின்வரும் கருத்துகளை எதிரொலிக்குத் தெரிவித்தார்.

“20 புள்ளிகளுக்குக் குறைவாகப் பெறும் மாணவர்களுக்கு, VCAAவினால் புள்ளியே வழங்கப்படுவதில்லை என அறிகிறோம். பரீட்சையில் இவர்கள் பலிக்கடாக்கள் ஆக்கப்படுகிறார்கள். எத்தனை தமிழ் மாணவர்கள் இந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதையும் ஒவ்வொரு பாடசாலையும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டும். பாடங்களைத் தெரிவுசெய்யும் மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் உண்மையான நிலை தெரிவது மிக அவசியம். ஏஊறு என்பது, அவர்களின் வாழ்க்கையைத் தீர்மானிப்பது. நல்லதை மட்டும் பறைசாற்றி, மிகுதியை மூடி மறைத்தல் நிகழுமாயின், அது தவறு”– இவ்வாறு அந்த அன்பர் குறிப்பிட்டார்

எல்லா மாணவர்களின் மீதும் நியாயமான, ஒரே விதமான கவனிப்பு உள்ளதா என்ற கேள்வியும் சமூகத்தில் உரத்துக் கேட்கிறது. இது தெளிவுபடுத்தப்படவேண்டும். உயர் புள்ளிகளையும் விகிதாசாரங்களையும் காட்டுவதற்காக, சிலரை மட்டும் தேர்ந்தெடுத்து, ஊட்டி ஊட்டி வளர்ப்பதும் ஏனையோரைக் கைவிடுவதும், தமிழுக்குச் செய்யும் சேவையல்ல என்பதை வலியுறுத்துகிறோம்.



# பொண்டி கடற்கரை படுகொலை:

# ஆயுத கலாசாரமா? சியோனிச வெறுப்பா?

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

நீண்ட காலமாக அதிபயங்கரமான துப்பாக்கிச் சூட்டுப் படுகொலைகள் இல்லாமல் இருந்த அவுஸ்திரேலிய மண்ணில் இந்த வார இறுதியில் சிட்னி பொண்டி கடற்கரையில் நடந்த துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாகி, பலர் கொல்லப்பட்ட சம்பவம் முழு நாட்டையும் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது.

ஆயுத கலாசாரத்தால் 1984 முதல் 1996 வரை, பல படுகொலைகள் நிகழ்ந்துள்ளன. இதனால் பொதுமக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியது. இதனால் துப்பாக்கி வைத்திருப்பதற்கான சட்டங்கள் அவுஸ்திரேலியா முழுவதும் கணிசமாக கடுமையாக்கப்பட்டன. தானியங்கி மற்றும் அரைத் தானியங்கி துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதை அரசாங்கம் தடைசெய்தது.

ஒரு தேசிய துப்பாக்கி பதிவேட்டை நிறுவியது. துப்பாக்கி வாங்குதலுக்காக 28 நாள் காத்திருப்பு காலத்தை அறிமுகப் படுத்தியது. மேலும் அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்டு, துப்பாக்கிகளைப் பறிமுதல் செய்யும் திட்டத்தை தொடங்கியது. இதனால் 640,000 க்கும் மேற்பட்ட துப்பாக்கிகள் புழக்கத்தில் இருந்து பறிமுதல் செய்யப்பட்டன.

1996 ஆம் ஆண்டு போர்ட் ஆர்தர் படுகொலை நடந்தது. 29 வயதான துப்பாக்கிதாரி மார்ட்டின் பிரையன்ட் இரண்டு தானியங்கித் துப்பாக்கிகளால் கடை உரிமையாளர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதால் 35 பேர் கொல்லப்பட்டனர் ,மேலும் 23 பேர் காயமடைந்தனர்.

இந்தப் படுகொலை அவுஸ்திரேலிய அரசாங்கத்தை திகிலடையச் செய்தது. இதன் விளைவாக அவுஸ்திரேலியாவில் துப்பாக்கி கட்டுப்பாட்டு சட்டம் கொண்டுவரப்பட்டது. அன்றைய பிரதம மந்திரி ஜான் ஹோவர்ட் 1988 ஆம் ஆண்டு வன்முறைக்கான தேசிய குழுவின் அறிக்கையில் செய்யப்பட்ட துப்பாக்கிச் சட்டத் திட்டங்களை தேசிய துப்பாக்கி ஒப்பந்தமாக



ஏற்றுக்கொள்ள மாநிலங்களுக்கு அழுத்தம் கொடுத்தார்.

இதன் விளைவாக மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களுக்கு இடையே பிணைக்கப்படாத தேசிய துப்பாக்கி ஒப்பந்தம் (NFA) ஏற்பட்டது. ஏனெனில் அவுஸ்திரேலிய அரசியலமைப்பு துப்பாக்கிச் சட்டங்களை இயற்ற நேரடி அதிகாரத்தை வழங்கவில்லை. சில மாநிலங்களின் எதிர்ப்பை எதிர்கொண்ட பிரதமர் ஹோவர்ட், துப்பாக்கிகள் மீது அரசியலமைப்பு அதிகாரத்தை வழங்க அரசியலமைப்பை மாற்ற நாடு தழுவிய வாக்கெடுப்பு நடத்துவதாக அறிவுறுத்தினார்.

தேசிய துப்பாக்கி ஒப்பந்தத்தில் அனைத்து தானியங்கித் துப்பாக்கிகள் மீதான உரிமைகள் ஆகியவற்றின் மீது கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. ஆனால் பல துப்பாக்கி விற்பனை நிறுவனங்கள் இதை கடுமையாக விமர்சித்தனர். சில துப்பாக்கி நிறுவன உரிமையாளர்கள் அரசாங்கத்தை பாதிக்கும் முயற்சியில் லிபரல் கட்சிக்கு எதிராக குரல் கொடுத்தனர்.

(07ஆம் பக்கம் பார்க்க)

### வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி
ஆசிரியர்பீடம், எதிரொலி



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# பொண்டி கடற்கரை படுகொலை:
# ஆயுத கலாசாரமா? சியோனிச வெறுப்பா?

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

**புதிய ஆயுதத் திருத்தச் சட்டம்**

1997இல் துப்பாக்கிகளை திரும்ப பெறும் திட்டத்தை அரசு அறிவித்தது. தேசிய பாதுகாப்பு அலுவலகம் இந்தத் திட்டம் மூலம் 640,000 க்கும் மேற்பட்ட துப்பாக்கிகளை கட்டாயமாக மீளப் பெற்றது. அவற்றில் பல அரை தானியங்கி துப்பாக்கிகள் மற்றும் குறிபார்த்து சுடும் துப்பாக்கிகள் 1996 சட்ட மாற்றங்களின் விளைவாக தடைசெய்யப்பட்டன.

**ஆஸியில் முன்னைய படுகொலைகள்:**

குறிப்பாக ஆயுத கலாசாரத்தால் 1984 முதல் 1996 வரை, பல படுகொலைகள் நிகழ்ந்துள்ளன. இதனால் பொதுமக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியது.

1984 மில்பெர்ரா (Milperra) படுகொலை பல்வேறு சட்ட விரோத மோட்டார் சைக்கிள் கும்பல்களுக்கு இடையிலான தொடர்ச்சியான மோதல்களில் ஒரு முக்கியமான சம்பவமாகும். இதன் பின்னர் 1987 ஆம் ஆண்டில், ஹாடில் ஸ்ட்ரீட் படுகொலை மற்றும் குயின் ஸ்ட்ரீட் படுகொலை மெல்போர்னில் நடந்தன.

இதற்கு பதிலளிக்கும் விதமாக, பல மாநிலங்கள் அனைத்து துப்பாக்கிகளையும் பதிவு செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் வகையில் மத்திய அரசு நடவடிக்கை எடுத்தது. மேலும் சுயமாக ஏற்றும் துப்பாக்கிகள் மற்றும் துப்பாக்கிகள் கிடைப்பதை கட்டுப்படுத்தின.

இதன் பின்னர் 1991ஆம் ஆண்டு நியூ சவுத் வேல்ஸில் நடந்த ஸ்ட்ராத்ஃபீல்ட் (Strathfield) படுகொலையில், இரண்டு பேர் கத்தியால் கொல்லப்பட்டனர். மேலும் ஐந்து பேர் துப்பாக்கியால் கொல்லப்பட்டனர்.

கொடூரமான இந்த தாக்குதல்களின் காரணமாக துப்பாக்கி வாங்குபவர்கள் உரிமம் பெற வேண்டும் என்று 1991இல் டாஸ்மேனியா மாநில ஒரு சட்டத்தை இயற்றியது. இருப்பினும் அதை அமுலாக்கம் செய்ய முடியாது என்ற முடிவுக்கு வந்தது. இருப்பினும் டாஸ்மேனியா மற்றும் குயின்ஸ்லாந்தில் துப்பாக்கிச் சட்டங்கள் நீண்ட ஆயுதங்களுக்கு ஒப்பீட்டளவில் குறைவாகவே இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.





**போர்ட் ஆர்தர் படுகொலை:**

1996 ஆம் ஆண்டில் ஏப்ரல் 28 அன்று, மார்ட்டின் பிரையன்ட் என்பவன் டாஸ்மேனியாவில் உள்ள போர்ட் ஆர்தர் (Port Arthur) வரலாற்றுத் தளத்தில் துப்பாக்கிச் சூட்டை நடத்தியதால் 35 பேர் கொல்லப்பட்டனர். இந்த கொடிய துப்பாக்கிச் சூட்டின் சூத்திரதாரியான பிரையன்ட் குற்றத்தை ஒப்புக்கொண்டார். அவருக்கு பரோல் சாத்தியம் இல்லாமல் 35 ஆண்டுகள் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தக் கொடூர நிகழ்வு ஆஸி தேசத்தை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. உடனடி அரசியல் நடவடிக்கையைத் தூண்டியதுடன், இரண்டு வாரங்களுக்குள், பிரதமர் ஜான் ஹோவர்ட் தேசிய துப்பாக்கி சட்ட ஒப்பந்தத்தை அறிவித்தார். போர்ட் ஆர்தர் படுகொலை அவுஸ்திரேலியாவின் நவீன வரலாற்றில் ஒரு முக்கியமான தருணமாக மாறியது. துப்பாக்கிகளைப் பற்றிய பொது அணுகுமுறைகளை மாற்றியமைத்து, உலகளவில் வெற்றிகரமான துப்பாக்கிக் கட்டுப்பாட்டுச் சீர்திருத்தத்தில் ஆஸி அரசு முன்னிலை வகித்தது.

**பொண்டி யூத மக்கள் படுகொலை:**

நீண்ட காலமாக பாரதூரமான துப்பாக்கிச்சூட்டுப் படுகொலைகள் இல்லாமல் இருந்த போதிலும் இந்த வார இறுதியில் 2025 டிசம்பர் 14ம் ஞாயிறு மாலை சிட்னி பொண்டி கடற்கரையில் (Bondi Beach) யூத சமூகத்தை குறிவைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 16பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

நியூ சவுத் வேல்ஸ் மாநில காவல்துறையின் தகவலின் படி யூத சமூகத்தினரை குறிவைத்து பொண்டி கடற்கரையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 16 பேர் கொல்லப்பட்டதோடு, ஒரு குழந்தை உட்பட 46பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யூத மக்களின் ஹனுக்கா பண்டிகையின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் கடற்கரையில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் 1,000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் இந்த படுகொலைகள் நடைபெற்றன என மாநில காவல் துறையினர் தெரிவித்தனர்.

அத்துடன் பல வெடிபொருட்கள் இருப்பதாக நம்பும் ஒரு வாகனத்தை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

அவுஸ்திரேலியாவில் பொதுமக்கள் மீதான துப்பாக்கிச் சூடுகள் மிக அரிதானவை. மேலும் இந்த சம்பவம் பொது மக்களை மிகவும் அதிர்ச்சியடையச் செய்துள்ளது. இந்தச் சம்பவத்தில் ஒரு துப்பாக்கிதாரி கொல்லப்பட்டுள்ளார். இரண்டாவது சந்தேக நபர் ஆபத்தான நிலையில் உள்ளார் என்று காவல்துறையினர் தெரிவித்தனர்.

அவைஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீஸ் யூத சமூகத்தினரை குறிவைத்து பொண்டி கடற்கரையில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 16 பேர் கொல்லப்பட்ட தாக்குதலை நமது நாட்டின் இதயத்தைத் தாக்கிய தீய எதிர்ப்பு, பயங்கரவாதத்தின் செயல் என்று விவரித்தார்.




TCECA
Tamil Community Empowerment Council Australia Inc
வழங்கும்
JM SOLAR SOLUTIONS
L&R Global Appliances
இவர்களின் ஆதரவில்
இசைப்பிரியனின்
இசைச் சங்கமம்
தாயக மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக, தாயகத்தின் புகழ் பூத்த இசையமைப்பாளர் இசைப்பிரியன் மற்றும்
பிரபல தாள வாத்தியக் கலைஞர் பானுதீபனுடன் மெல்பேர்ண் கலைஞர்கள் இணைந்து படைக்கவிருக்கும் மாபெரும் இசைச் சங்கமம்.
SATURDAY, 07TH OF FEBRUARY 2026 @ 6PM
Rowville Performing Arts Centre
Rowville Secondary College
Humphreys Way, Rowville Victoria 3178
For tickets and information contact:
0404 354 811 | 0450 662 990 | 0433 002 619 | 0406 429 107

# சீன ஏற்றுமதிகள் அதிகரிப்பு

ஐரோப்பா, ஆஸ்திரேலியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவுக்கான ஏற்றுமதி அதிகரித்து வரும் நிலையில், சீனாவின் வர்த்தக உபரி 1 ரில்லியின் அமெரிக்க டொலரைத் ($US1 trillion) தாண்டியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் வர்த்தகப் போர் காரணமாக , வரிகளைத் தவிர்க்கும் நோக்கில் உற்பத்தியாளர்கள் அமெரிக்கா தவிர ஏனைய சந்தைகளை இலக்கு வைத்து செயற்பட்டுவருகின்றனர்.

இந்நிலையிலேயே சீனாவின் ஏற்றுமதி வருமானம் எகிறியுள்ளது.

அத்துடன், ஐரோப்பா, ஆஸ்திரேலியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவுக்கான ஏற்றுமதிகளும் அதிகரித்துள்ளன.

கடந்த நவம்பர் மாதத் தரவுகளுடன் ஒப்பிடுகையில் அமெரிக்காவுக்கான ஏற்றுமதிகள் மூன்றில் ஒரு பங்கு குறைவடைந்துள்ளன என்பது தெரிகின்றது.

அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் மீது ட்ரம்ப்,வரிகளை அதிகரித்தார். இதனால் பல நாடுகளும் பாதிக்கப்பட்டன.

எனினும், ஐரோப்பா மற்றும் ஏனைய நாடுகளுக்கான தனது ஏற்றுமதியை அதிகரிக்கும் நடவடிக்கையில் சீனா இறங்கியமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவுக்கான சீனாவின் ஏற்றுமதிகள் 29 சதவீதத்தால் குறைவடைந்திருந்தாலும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதிகள் 14.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. ஆஸ்திரேலியாவுக்கான ஏற்றுமதியும் 38 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.



# உக்ரைனுக்கு உதவி

ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கிடையிலான போரில் உக்ரைன் பக்கம் நிற்கும் ஆஸ்திரேலியா, அந்நாட்டுக்கு மேலும் 95 மில்லியன் டொலர் பெறுமதியான இராணுவ உதவிகளை அறிவித்துள்ளது.

அத்துடன், உக்ரைன்மீதான சட்டவிரோதப் போரை ரஷ்யா முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என வலியுறுத்தியுள்ள ஆஸ்திரேலியா, ரஷ்ய கடற்படையினர் மீதான தடைகளையும் நீடித்துள்ளது.

உக்ரைனுக்கு இராணுவ உதவிகளை வழங்குவதில் நேட்டோ அமைப்பு தீவிரம் காட்டிவரும் நிலையில், ஆஸ்திரேலிய நிதியில் 50 மில்லியன் டொலர் அதற்காகப் பயன்படுத்தப்படும்.

ஆஸ்திரேலியா நேட்டோ அமைப்பில் அங்கம் வகிக்காவிட்டாலும் சர்வதேசப் பங்காளார் என்ற அடிப்படையில் அவ்வமைப்புக்கு ஆதரவளிக்கின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்புக்கு பறக்கும் ஜெட்ஸ்டார்



ஆஸ்திரேலியாவில் இருந்து இலங்கைக்கான நேரடி விமான சேவையை முன்னெடுப்பதற்கு ஜெட்ஸ்டார் விமான சேவை நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய மெல்பேர்னில் இருந்து கொழும்புக்கான நேரடி விமான சேவை 2026 ஒகஸ்ட் 25 ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வாரத்துக்கு மூன்று முறை சேவையை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

மெல்பேர்ன் முதல் கொழும்பு வரையான நேரடி விமான சேவையை ஜெட்ஸ்டார் நிறுவனம் முன்னெடுப்பது, அந்த நிறுவனத்தின் 22 ஆண்டுகால வரலாற்றில் முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளில், ஜெட்ஸ்டார் விமான நிறுவனம் 26 புதிய வழித்தடங்களை அறிவித்துள்ளது. மேலும் 13 புதிய விமானங்களை வரவேற்றுள்ளது. இதன்மூலம் பயணிகள் குறைந்த விலையில் பயண ஏற்பாட்டை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மெல்பேர்ன் முதல் கொழும்பு வரையிலான நேரடி விமான சேவை ஆஸ்திரேலியர்களுக்கு இலங்கைக்கு அதிக விமானப் பயணங்களை மேற்கொள்வதற்கான புதிய, நேரடி மற்றும் மலிவு விலை வழியை வழங்கும் என்று ஜெட்ஸ்டார் தலைமை நிர்வாக அதிகாரி தெரிவித்தார்.

மெல்பேர்ன் மற்றும் கொழும்புக்கு இடையில் ஸ்ரீலங்கா எயார் லைன்ஸே இதுவரைகாலமும் நேரடி விமான சேவையை வழங்கிவந்தது. இந்நிலையிலேயே ஆஸ்திரேலிய நிறுவனமொன்றும் அம்முயற்சியில் இறங்கியுள்ளது.

முதல் பயணத்துக்கான ரிக்கெட் விற்பனை ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளது.

வாரத்தில் செவ்வாய், வியாழன் மற்றும் சனி ஆகிய நாட்களிலேயே மெல்பேர்னில் இருந்து கொழும்புக்கு விமானம் புறப்படவுள்ளது.

விமான சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வணிக இருக்கைகளை இரட்டிப்பாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 'வைஃபை' உள்ளிட்ட வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

# 25 ஆண்டுகள் சிறை!

யுவதியொருவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்த முன்னாள் செவிலியர் ஒருவருக்கு 25 வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ராஜ்விந்தர் சிங் என்ற 41 வயது நபருக்கே கெய்ர்ன்ஸ் உச்ச நீதிமன்றத்தால் மேற்படி தண்டனை வழங்கப்பட்டது.

2018 ஒக்ரோபர் மாதம் குயின்ஸ்லாந்திலுள்ள கடற்கரைப் பகுதியில் வைத்தே 15 வயதான குறித்த யுவதி குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவத்தையடுத்து இந்தியாவுக்கு




தப்பியோடிய ராஜ்விந்தர் சிங், அங்கு சில வருடங்கள் தலைமறைவாக இருந்துள்ளார். 2022 ஆம் ஆண்டு டெல்லியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

ஆஸ்திரேலியாவுக்கு நாடு கடத்தப்பட்ட அவருக்கு எதிராக 2023 இல் கொலைக்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இது தொடர்பான வழக்கு விசாரணையிலேயே அவர் குற்றவாளியென்பது நிரூபிக்கப்பட்டு, 25 வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

# முத்தரப்பு சந்திப்பு



ஆஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களுக்கிடையில் விசேட கூட்டமொன்று நடைபெற்றுள்ளது.

பென்டகன் எனப்படும் அமெரிக்க இராணுவத் தலைமையகத்திலேயே முத்தரப்பு சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஆக்கஸ் (AUKUS) எனப்படும் பாதுகாப்பு கூட்டணியில் மேற்படி மூன்று நாடுகளும் அங்கம் வகிக்கின்றன.

ஆக்கஸ் பாதுகாப்பு ஒப்பந்தத்தின் பிரகாரம் அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களை ஆஸ்திரேலியா கொள்வனவு செய்யவுள்ளது.

இதற்குரிய உதவிகளை வழங்குவதற்கு அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் இணக்கம் வெளியிட்டிருந்தன.

எனினும், அமெரிக்காவுக்கு முதலிடம் என்ற கொள்கையால் இந்தத்திட்டம் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டது.

இந்நிலையில் இதனை பெற்றுக் கொள்வதற்குரிய இராஜதந்திர நகர்வுகளில் ஆஸ்திரேலியா இறங்கியது.

இதற்கமையவே பாதுகாப்பு அமைச்சர்கள் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதனை சிறந்த முன்னேற்றமாக ஆஸ்திரேலியா கருதுகின்றது.




விக்டோரியா தமிழ்க் கலாச்சார கழகம்
பெருமையுடன் வழங்கும்

## தைப் பொங்கல் 2026

Date: 18/01/2026
Venue: Harmony Square Dandenong
Time: 12pm

Proudly Sponsored by

மெல்பேர்னில் உங்கள் அபிமான வானொலி சேவை
சங்கநாதம்
3MDR 97.1 FM
SANGANATHAM TAMIL COMMUNITY BROADCAST FM 97.1 ON SUNDAY 8 AM TO 10 AM

GREATER DANDENONG City of Opportunity

VICTORIAN multicultural commission


XD
XDream Jewellery
Manufacturers & Importers of Modern Styles in 22K (916) Solid Gold
Where Tradition Meets Timeless Luxury
Discover gold jewellery, designed to sparkle for generations.
22K & 24K Pure Gold – Exquisite Designs, Unmatched Craftsmanship
Cash When You Need It
Trust You Can Count On
Bring your gold Top Dollar Paid
Safe & Secure • Same-Day Service
02 8677 4490
xdreamjewellery.com.au
08xdream@gmail.com
8 Aurelia St,
Toongabbie NSW 2146


VICTORIA
தமிழ் மரபுத் திங்கள்
தமிழர் திருநாள்
Tamil Festival Australia
தமிழர் திருநாள் ஆஸ்திரேலியா 2026
25 JANUARY 2026 | ஞாயிற்றுக்கிழமை
காலை 9:00 மணியிலிருந்து
Event Central at Caribbean Park,
850 Stud Road, Scoresby, VIC 3179
Access via Gate 20 on Stud Road
ஊர் கூடிப் பொங்கல்
பாரம்பரிய விளையாட்டுகள்
கலை கலாசார நிகழ்வுகள்
அங்காடிகள்
சிறுவர் சவாரிகள்/களிப்பூட்டும் நிகழ்வுகள்
கண்காட்சிகள் / பங்கேற்புச் செயல்பாடுகள்
மாபெரும் இசை நிகழ்ச்சி
FREE ENTRY
அனுமதி இலவசம்
FREE ENTRY
விக்டோரியா வாழ் தமிழர்களின்
மாபெரும் தைப்பொங்கல் திருவிழா!
அனைவருக்குமான ஒரு திருவிழா
விக்டோரியா வாழ் தமிழர்கள் மற்றும் பல தமிழ் சமூக அமைப்புகள் இணைந்து
கொண்டாடும் மாபெரும் தைப்பொங்கல் விழா!
Australian Tamil Chamber of Commerce
TAMIL ARTS
Singing fish
TGR
www.tamilfestival.org.au
vanakkam@tamilfestival.org.au

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



**இலங்கையில் 'டித்வா' பேரிடர் காலத்தில் கலாவாவி திடீரெனத் திறந்துவிடப்பட்ட போது, புத்தளம் ஏ-12 வீதியில் சுமார் 70 பயணிகளுடன் அந்த வெள்ளத்துக்குள் சிக்குண்ட பேருந்தில் பயணித்த ஆதவன் வேணுஜன் (மொறட்டுவப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன்), அந்த இடருக்குள் இருந்து உயிரோடு மீண்ட நெஞ்சை உறையவைக்கும் அனுபவம்.**

# பேய்வெள்ள முற்றுகைக்குள் பேருந்து..!



● ஔண்யன்





**புத்தளம் இராஜாங்கனையில் பஸ்ஸோடு வெள்ளத்தில் சிக்கிய பயணிகளின் திகிலூட்டும் அனுபவம்**

## வெள்ளக்காட்டுக்குள் திக் திக் கணங்கள்...!

### 27.11.2025

வீட்டுக்கு வெளியே மழை கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்தது.

வாழ்க்கையில் மறக்கவே முடியாத, மரணத்தை மிக அருகில் உணரும் சம்பவத்தை எதிர்கொள்ளப் போகின்றேன் என்பது அப்போது எனக்குத் தெரிந்திருக்கவில்லை. மூன்று நாள் குறுகிய விடுமுறை முடிவடைகின்றது. 27ஆம் திகதி சென்றால்தான் 28 ஆம் திகதி காலை பல்கலைக்கழகத்துச் செல்லமுடியும். வழக்கம்போல, மீசாலையில் 27 ஆம் திகதி இரவுநேரத் தபால்சேவை ரயிலான யாழ்தேவியில் ஏறிக்கொண்டேன். கடிகாரம் அப்போது இரவு 9 மணியைக் காட்டிக்கொண்டிருந்தது. என் பல்கலைக்கழகத் தோழமைகளான கபில்ராஜ், அயஜ், ஜக்சன், டினோஜன் ஆகியோரும் அதே ரயிலில் இருந்தார்கள். மழையோ இன்னும் மூர்க்கமாகப் பெய்து கொண்டிருந்தது. ஆனால் இரும்புப்பாம்பான ரயிலுக்கு அந்த மழை ஒரு பொருட்டே இல்லை. அந்தப் பெருமழையை அலட்சியப்படுத்திக்கொண்டு தன் தண்டவாளத்தில் ரயிலின் பயணம் தொடர்ந்தது. முறிகண்டி வரை எல்லாமே நன்றாகத்தான் இருந்தது. முறிகண்டியில் தான் முதல் அபசகுனம்.

### முறிகண்டியில் முறிந்தமரம்

மழையை ஊடறுத்தபடி போய்க்கொண்டிருந்த ரயில் முறிகண்டி ரயில் நிலையத்தில் அப்படியே நின்றுவிட்டது. பயணிகள் ஏறுவதற்காக சில நிமிடங்கள் மட்டுமே அங்கே ரயில் வழமையாக நிற்கும். ஆனால் அன்றைக்கு மிகநீண்டநேரமாகியும் ரயில் புறப்படுவதாகத்தெரியவில்லை. எவ்வளவுநேரம் தான் உள்ளேயே இருக்கமுடியும்? ஏன் இவ்வளவு நேரமாக முறிகண்டியை விட்டு ரயில் அசைய மறுக்கின்றது என அறிவதற்காக, வெளியே எட்டிப் பார்த்தோம். அப்போதுதான் ரயில் தண்டவாளத்தின் குறுக்கே பெரியதொரு மரம் வீழ்ந்து கிடப்பதை அறியமுடிந்தது. எனினும் ஒரு மணித்தியாலமாகப் போராடிய ரயில்நிலைய அதிகாரிகளின் முயற்சியால் அந்த மரம் அகற்றப்பட, மீண்டும் யாழ்தேவி சடசடத்தபடி வேகமெடுத்தது. அதன்பின்னர் வழியில் எந்தத் தடையும் இருக்கவில்லை. இன்னும் சில மணித்தியாலங்களில் மொறட்டுவவை அடைந்துவிடலாம் என்ற நம்பிக்கையில் இருந்தபோது, அதற்கு அநுராதபுரத்தில் ஆப்பு வைத்தது 'டித்வா' பேரிடர்.

### அநுராதபுரத்தில் தடை

நள்ளிரவு தாண்டிய தருணத்தில் அநுராதபுரம் ரயில் நிலையத்தை யாழ்தேவி சென்றடைந்தபின்னர், முறிகண்டியைப் போல முன்னோக்கி அசையாமல் நின்றுவிட்டது. 'இங்கும் ஏதாவது மரங்கள் தண்டவாளத்தின் குறுக்கே விழுந்துவிட்டனவா?' என்ற கேள்வி ரயிலில் இருந்தவர்களிடையே எழத் தொடங்கியது. எங்களுடைய கேள்விகளுக்கு ஒரு மணித்தியாலத்தின் பின்னரே பதில் கிடைத்தது. அந்த ரயில்நிலையப் பாதுகாப்பு அதிகாரிகள் சிலர் எம்மிடம் வந்தனர்.


'எல்லாரும் மன்னிக்க வேண்டும். இதற்கு அங்கால நீங்கள் ரயிலில் செல்லமுடியாது. ரயில் பாதைகளை வெள்ளம்மூடிவிட்டது. எனவே இப்போதைக்கு ரயிலில் பயணிக்க முடியாது. நீங்கள் திரும்பிச் செல்வதே நல்லது' என்று அந்த அதிகாரிகள் சொல்லச்சொல்ல, எமக்கோ கடும் அதிர்ச்சி. 'அப்படியானால் கம்பஸூக்கு போகேலாதா? இனி திரும்பி வீட்ட போய், இன்னொருநாள் வெளிக்கிடுறதை விட பேசாமல் இஞ்சையிருந்தே ஏதும் பஸ்ஸில போவம். காசு போனாலும் பரவாயில்லை. முதல்ல கம்பஸூக்குப் போய்ச் சேர்ந்திடவேணும்' என்ற எண்ணத்தில் நானும் நண்பர்களும் ரயிலை விட்டிறங்கி, அநுராதபுரம் பஸ்நிலையத்துக்குச் சென்று மொறட்டுவவுக்குச் செல்லக்கூடிய பஸ்ஸைத் தேடத்தொடங்கினோம். புல்மோட்டையில் இருந்து கொழும்பு செல்லும் தனியார் பஸ்ஸொன்று கண்ணில் தட்டுப்பட ஓடிப்போய் அதில் ஏறிக்கொண்டோம். எம்மைப்போலவே ரயிலில் பயணித்த வேறு சிலரும் அந்த பஸ்ஸில் வந்து ஏறினர். 69 பேர் அந்த பஸ்ஸூக்குள் இருந்தோம். பேராபத்தை நோக்கி எங்கள் பஸ் பயணிக்கப்போகின்றது என்பதை நாங்கள் 69 பேரும் அப்போது தெரிந்திருக்கவில்லை.

### அங்கால போகவேண்டாம்!

மீண்டும் பயணம் தொடங்கியது. ஏற்கனவே ரயிலில் பயணித்த அசதியும், மழைக்குளிருமாகச் சேர்ந்து வாட்ட, 'இனி எப்படியும் மொறட்டுவ போய்ச் சேர்ந்துவிடுவோம்'என்ற நிம்மதியில் அப்படியே உறங்கிவிட்டேன். திடீரென பஸ் ஒருமுறை சடுதியாக 'பிறேக்' அடித்து, குலுங்கி நின்றது. அந்தக் குலுக்கலில் தூக்கம் தொலைந்துபோனது. வெளியே பலர் கத்தியபடி ஏதோ சொல்லிக்கொண்டு, பஸ்ஸின் முன்பக்கமாக பலமாகக் கைகளால் தட்டினார்கள். புத்தளம், இராஜாங்கனைப் பகுதியில் தான் எங்கள் பஸ் மக்களால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது. 'இதற்கு அங்கால போகவேண்டாம். ஒரே வெள்ளம். திரும்பிச் செல்லுங்கள்' இதைத்தான் திரும்ப அவர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

'சரி, பஸ் பயணமும் அம்போதானோ? பேசாமல் அநுராதபுரத்தோடு திரும்பியிருக்கலாமோ? இப்போது புத்தளத்தில் இருந்து திரும்பிப் போறது இன்னும் கரைச்சலெல்லோ' என்று மனதுக்குள் சலித்துக்கொண்டேன்.

'எங்களுக்கு முன்னால் சென்ற பஸ்லெல்லாம் போட்டுதுதானே? இது பெரிய பஸ். இந்த வெள்ளத்துக்கால போகும், பிரச்சினையில்லை. இப்பிடி கனக்க வெள்ளங்களுக்கால எல்லாம் எங்கட பஸ்ஸோட போயிருக்கிறம்' என்று சாரதியும், நடத்துநரும் அந்த மக்களுக்குச் சொன்னபோது, எனக்கு 'அப்பாடா, பயணத்துக்கு தடையில்லை'என்று நிம்மதி பிறந்தது.



### மூச்சை விட்ட பஸ் மூர்க்கமான வெள்ளம்

எங்கள் பஸ் புறப்பட்ட பின்னரும், அந்த மக்கள் கூக்குரலிட்டு எம்மை நிறுத்தவே முயற்சித்தார்கள். ஆனால் அவர்களின் குரல் அந்தப் பெருமழைக்குள் அடங்கிவிட, எங்கள் பஸ் உறுமியபடி வெள்ளத்தைக் கிழித்தபடி விரையத்தொடங்கியது. முதலில் குதிரை வேகத்தில் சென்ற பஸ், வெள்ளத்தோடு போட்டிபோட முடியாமல் நத்தைவேகத்துக்கு இறங்கியது. ஒரு கட்டத்தில் பஸ்ஸின் இயந்திரப்பகுதிக்குள் இருந்து விநோதமான சத்தங்கள் கேட்கத் தொடங்கின. அடுத்த கணமே, வெள்ளத்துக்குள் சேடமிழுத்துக்கொண்டிருந்த பஸ், ஒரு குத்திட்டு ஆடி அடங்கி மூச்சை முற்றாக நிறுத்திவிட்டது. பஸ் நின்றதும்தான் தாமதம், குபுகுபு வென வெள்ளம் பஸ்ஸூக்குள் ஏறத்தொடங்கிவிட்டது. வெளியே மழை பேயாட்டம் ஆடிகொண்டிருக்க, அந்த வேகத்தை சமப்படுத்துவது போல பஸ்ஸூக்குள் வெள்ளத்தின் மட்டம் உயர்ந்துகொண்டே இருந்தது.

### காலைவாரிய கலாவாவி

என்னசெய்வதென்று எவருக்கும் புரியவில்லை. எல்லோரும் பரபரப்போடு கீழிருந்த பொருள்களையெல்லாம், வெள்ளம் மூடாதபடி உயரமான மேற்தளத்துக்கு இடமாற்றினோம். அப்படியே எல்லோரும் பஸ்ஸின் மேற்தளத்துக்கு ஏறிவந்துவிட்டோம். மேலே நின்று பார்த்தபோதுதான் எப்படியான பயங்கரத்துக்குள் நாங்கள் சிக்கிவிட்டோம் என்று புரிந்தது. பார்க்குமிடமெல்லாம் ஒரே வெள்ளக்காடு. கிட்டத்தட்ட பத்துப் பன்னிரெண்டு அடி உயரமான வெள்ளம். அந்த வெள்ளம் சும்மா நிற்கவில்லை. பேரிரைச்சலோடு வீதியின் ஒருமுனையில் இருந்து மறுமுனைக்கு காட்டாறு போல பாய்ந்துகொண்டிருந்தது. தப்பித்தவறி அந்த வெள்ளத்துக்குள் விழுந்தால் அவ்வளவுதான். அப்படியே அடித்துக்கொண்டு வெள்ளம் சென்றுவிடும்.

'ஊர்மக்கள் மறிக்க மறிக்க நாங்கள் வந்தது பெரும் தவறு' என்று எல்லோரும் சொல்லிக்கொண்டோம். ஆனாலும் சாரதி, நடத்துநரிலும் தவறு சொல்லமுடியாது. ஏனென்றால் ஊர்மக்கள் மறித்த இடத்தில் இவ்வளவு வெள்ளம் இருக்கவில்லை. அத்தோடு இந்த பஸ்ஸூக்கு முன்னால் சென்ற பஸ் எதுவும் திரும்பி வரவில்லை. அதனால்தான் நாங்களும் செல்லலாம் என எங்கள் பஸ்ஸின் சாரதியும், நடத்துநரும் எண்ணியிருப்பார்கள். அவர்களின் கணக்கும் சரிதான். ஆனால் அந்தக் கணக்கை கலாவாவி மாற்றிவிட்டது.

நீர்வரத்து அதிகமென்பதால் கலாவாவி உடைப்பெடுக்கும் அபாயம் தோன்றியிருந்தது. எனவே அதனைத் தவிர்க்க, உடனடியாக அதன் வான்கதவுகளைத் திறந்துவிட்டார்கள். அடைபட்டுக்கிடந்த வெள்ளம் மடை திறந்து ஆவேசமாக ஓடிவந்தபோதுதான், அதிகாலையில் எங்கள் பஸ் அந்தக் காட்டாற்று வெள்ளத்தில், நட்டநடுவீதியில் சிக்கிவிட்டது. ஒரு நிமிடம் தாமதமாக கலாவாவியின் வான்கதவுகள் திறக்கப்பட்டிருந்தால், எங்கள் பஸ் தப்பியிருக்கும். இதுதான் காலமென்பது.

### போன்களும் கைவிட்டன

வெள்ளம் எங்களை நிம்மதியா இருக்க விடவில்லை. கொட்டும் மழையில், எங்களிடம் இருந்த சில குடைகளைப் பிடித்தபடி பஸ்ஸின் மேற்தளத்தில் நின்றபடி "எங்களைக் காப்பாற்றுங்கள்" என்று உதவி கேட்கும் முயற்சியில் இறங்கினோம். ஆனால் காலம் எங்களை முழுமையாகக் கைவிட்டிருந்தது. தொலைத்தொடர்பு சேவைகள் செயலிழந்ததால், எவரது தொலைபேசியில் இருந்தும் யாருக்கும் அழைப்பெடுக்க முடியவில்லை. இந்த விடிகாலையில் சுற்றிலும் வெள்ளக்காடு உள்ள நிலையில், தொலைபேசிகளும் கழுத்தறுத்ததால் என்ன செய்வதென்று தெரியாமல் பதைபதைத்துக் கொண்டிருந்தோம்.

### ஆபத்பாந்தவனான பத்மநிகேதன்

அப்போதுதான் ஆபத்பாந்தவனாக எம்மோடு பஸ்ஸின் மேற்தளத்தில் நின்ற இளைஞர் ஒருவர் தனது போனை நீட்டினார். அந்த இளைஞரின் பெயர் பத்மநிகேதன். யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் பணிபுரிந்த அவர், பதவியுயர்வு தொடர்பான நேர்முகப் பரீட்சைக்காக கொழும்பு செல்வதற்காக வந்திருந்தார். அவரது போனில் 'மொபிடெல்' சிம் இருந்தது. அந்த வலையமைப்புமட்டும் அந்தப் பேரிடர் நேரத்திலும் இயங்குநிலையில் இருந்தது. எங்களுக்கு பத்மநிகேதனும், அவரது போனும் கடவுள் போல தெரிந்தார்கள்.

என்னொடு பயணித்த பல்கலைக்கழக நண்பர்களில் ஒருவனின் தந்தை கிராமசேவகராக இருக்கிறார். எனவே முதலில் அவருக்கு போன் பண்ணி, நாங்கள் சிக்கிக்கொண்ட விடயத்தைக் கூறி, புத்தளம் மாவட்டச் செயலர் மூலம் எங்களைக் காப்பாற்றுமாறு கெஞ்சினோம். நாங்கள் சிக்கியிருக்கும் பகுதியின் 'லொக்கேசனையும்' அனுப்பிவைத்தோம். அவர் உடனடியாக தனக்குப் பரிச்சயமான மன்னார் மாவட்டச் செயலர் கனகேஸ்வரனுக்கு போன் மூலம் விடயத்தைச் சொல்ல, மன்னார் மாவட்டச் செயலர் உடனடியாக இதனை புத்தளம் மாவட்டச் செயலருக்குத் தெரியப்படுத்தினார். 'மிகவிரைவில் மீட்கப்படுவீர்கள்' என்று தகவல் கிடைக்க, ஆசுவாசப் பெருமூச்சை விட்டுக்கொண்டோம்.

### முதல் முயற்சி

சில நிமிடங்களில் எம்மை நோக்கி 'ஜே.சி.பி' இயந்திரமொன்று வருவதைக் கண்டோம். ஆனால் இந்தப் பெரும் வெள்ளத்தோடு எதிர்நீச்சல் போடமுடியாமல், அந்த 'ஜே.சி.பி' இயந்திரம் பின்வாங்கி, திரும்பிச் சென்றுவிட்டது. இப்போது பொலபொலவென விடிந்து விட்டிருந்தது.

எமது அவலம் தொடர்பாக எமது கையடக்கத் தொலைபேசிகள் மூலம் அனர்த்த முகாமைத்துவ அவசரப் பிரிவினர், பொலிஸார் என்போருக்குத் தெரியப்படுத்தினோம். அதைவிட புத்தளம் மாவட்டச் செயலரும், மன்னார் மாவட்டச் செயலரும் நாங்கள் பஸ்ஸோடு வெள்ளத்துக்குள் மாட்டுப்பட்ட விடயத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வரை கொண்டு சென்றிருந்தனர்.



### வந்தது படகு

28.11.2025 வெள்ளிக்கிழமை காலை.

கலாவாவியில் இருந்து பாய்ந்து வரும் வெள்ளத்தின் மூர்க்கம் வரவர அதிகரித்தபடி இருந்தது. அது எங்கள் பஸ்ஸையே அடித்துச் சென்றுவிடுமோ என்றும் எமக்கு அச்சம் பற்றிக்கொண்டது. எனவே எங்களிடமிருந்த பெட்சீற், சாரம், சேலை போன்றவற்றை முடிச்சுப் போட்டு ஒரு கயிறு போல மாற்றினோம். அந்தத் துணிக்கயிற்றின் ஒரு அந்தத்தை பஸ்ஸின் கண்ணாடிகளுக்கு ஊடாகச் செலுத்தி அதனைச் சுற்றிக்கட்டினோம், கயிற்றின் மறு அந்தத்தை நீச்சல் தெரிந்த பயணிகள் சிலர் உயிரைப்பணயம் வைத்து, அந்தக் காட்டாற்றுக்குள் நீந்திச் சென்று வீதியோரமாக இருந்த மின்கம்பத்தில் கட்டினார்கள். இப்போது அந்தத்துணிக்கயிறு பஸ்ஸை வெள்ளம் அடித்துச் செல்லவிடாமல் பிடித்துக்கொண்டு நின்றது. சிறிதுநேரத்தில் தூரத்தே ஒரு காற்றடைத்த சிறுபடகொன்று எம்மை நோக்கி வந்துகொண்டிருப்பதைக் கண்டதும் 'கடவுள் நம்மைக் கைவிடவில்லை' என்று நம்பிக்கை பிறந்தது.

(14ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
மார்கழி 2025

# பேய்வெள்ள முற்றுகைக்குள் பேருந்து..!



(13ஆம் பக்கத் தொடர்ச்சி)



## இதுதான் கடைசி நாளா?

இதுதான் உலகில் எங்களின் கடைசிநாள் என்பதாகவே எண்ணினோம்.

உரத்த சத்தமாக எல்லோரும் அவரவர் இஷ்ட தெய்வங்களை வேண்டினோம். அந்தக் கூரையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் எல்லோரும் ஒரு தாய் பிள்ளைகள் போல ஒன்றாக இருந்தோம். இந்துக்கள் தேவாரம், தோத்திரங்கள் பாடினோம், பிள்ளையாரை, முருகப்பெருமானை, காளியை, அம்மனை கண்ணீர் சொரியக் கும்பிட்டு மன்றாடினோம். கிறிஸ்தவர்கள் இயேசுவை வேண்டினார்கள். இயேசுவின் தோத்திரம் பாடினார்கள், செபித்தார்கள். முஸ்லிம்கள் அல்லாவை வேண்டினார்கள். சிங்களவர்கள் புத்தபெருமானை வழிபட்டார்கள். அந்த வெள்ளம் எங்களுக்குள் பேதம் பார்க்கவிடவில்லை.

## கைகொடுத்த கடைக்கூரை

அந்தக் காற்றடைத்த படகில் ஐவர் மட்டுமே பயணிக்கலாம். எடை அதிகரித்தால் அந்தப் படகு கவிழ வேண்டியதுதான். அத்தோடு மிக அதிகதூரமும் பயணிக்க முடியாது. ஆனால் இப்போதைக்கு அந்தக் காற்றடைத்த படகுமட்டுமே தஞ்சம். எனவே கடற்படையினரும், சுழியோடிகளும் எம்மை பஸ்ஸில் இருந்து ஐந்தைந்து பேராக இறக்கி, காற்றடைத்த படகுமூலம் அருகே இருந்த உயரமான கடைக்கட்டடமொன்றின் சீற் கூரையில் கொண்டுசென்று சேர்ப்பித்தனர். அந்தக் கடையொன்றும் அவ்வளவு பெரியதல்ல. 30 அடி நீளமும், 20அடி அகலமும் கொண்ட சிறிய கடைதான். ஆனால் இப்போதைக்கு அதில்தான் நாங்கள் 69 பேரும் இருக்கவேண்டும். ஏனென்றால், அந்தச் சுற்றுவட்டாரத்தில் இருந்த எல்லாக் கட்டடங்களையும் வெள்ளம் வந்த வேகத்தில் அள்ளிக்கொண்டு போய்விட்டது. இந்தக் கடை ஒன்றுதான் தப்பிப் பிழைத்திருந்தது. அந்தக் கடைக்கட்டடமும் இல்லாவிட்டால், நாங்கள் உயிர்தப்பியிருக்க முடியாது.

## வெள்ளத்திடம் மண்டியிட்ட பஸ்

நாங்கள் எல்லோரும் பஸ்ஸில் இருந்து இந்தக் கடையின் சீற் கூரையில் அமர்ந்த அடுத்தகணமே பெரும் சத்தம்.

நாங்கள் 69 பேரும் இருந்தபோது, பஸ்ஸின் எடை அதிகமாக இருந்ததால் வெள்ளத்தால் பஸ்ஸை பெரியளவில் அசைக்கமுடியவில்லை. ஆனால் நாங்கள் கடைக்கூரைக்கு வந்துவிட்டதால், எடைகுறைந்த பஸ்ஸை வெள்ளம் தூக்கி குத்தியது. பஸ் குத்துவாக்கில் வானைப்பார்த்தவாறு வாய்பிளந்து நின்றது. நாங்கள் கட்டிய துணிக்கயிறு இல்லாவிட்டால் அந்த பஸ் காட்டாற்று வெள்ளத்தோடு அடிபட்டுப் போயிருக்கும். எம்மை கூரையில் இறக்கிய பின்னர் மூன்று கடற்படையினர் எமக்குத் துணையாக நிற்க, காற்றடைத்த படகும் சென்றுவிட்டது. சுற்றிலும் பாய்ந்தோடும் பேய்வெள்ளம். நிற்காமல் பொழிந்து கொண்டிருக்கும் மழை. கைக்குழந்தைகள், பெண்கள், முதியவர்கள், இளைஞர்களென எங்கள் 69 பேருக்கும் அந்த ஒற்றைக்கூரையே கடைசிப் பிடிமானம். எல்லோருக்குமே நம்பிக்கை போய்விட்டது. இந்த வெள்ளத்துக்குள் சிக்குண்டு நாங்கள் அனைவரும் அள்ளுண்டு போகவேண்டியதுதான் என நினைத்துக் கலங்கத் தொடங்கினோம்.



## ட்ரோனில் வந்த உணவு



அந்த நேரத்தில் தூக்கம், பசி என்று எதைப்பற்றியும் எம்மால் சிந்திக்கவே முடியவில்லை. எப்படியாவது இந்த அபாயத்தில் இருந்து தப்பினால் போதும் என்பதே எங்களின் ஒரே எண்ணமாக இருந்தது. எங்களிடம் ஒரு சில குடைகளே இருந்தன. அவற்றில் ஒரு குடையை கைக்குழந்தையோடு இருப்பவர்களுக்கென்று கொடுத்துவிட்டோம். மிகுதிக் குடைகளைப் பிடித்தபடி, அதற்குள் நின்றுதான் போனில் எங்களைக் காப்பாற்றும் கோரிக்கைகளை பல தரப்புகளுக்கும் விடுத்தபடி இருந்தோம். ஜனாதிபதியினதும் மற்றும் அதிகாரிகளினதும் உத்தரவின் பிரகாரம் ட்ரோன் மூலம் எமக்கு உணவு, போர்வைத்துணி என்பன அனுப்பி வைக்கப்பட்டன. உணவு, போர்வை என்பன ட்ரோனில் வரும் போது, கூடவே ஒரு கத்தரிக்கோலும் கட்டி அனுப்புவார்கள். அந்தக் கத்தரிக்கோலால் உணவையும், போர்வையும் ட்ரோனோடு இணைத்திருக்கும் கயிற்றை வெட்டி எடுப்போம். இப்படி மூன்றுமுறை உணவு வழங்கினார்கள். அத்தோடு பத்மநிகேதனின் பையில் பணிஸ், மைலோ, பால் பைக்கெற் என்பன இருந்தன. அவற்றை குழந்தைகளுக்கு கொடுத்தோம். அதைவிட அருகே அந்த வெள்ளத்துக்குள்ளும் தலைநீட்டிக்கொண்டிருந்த எலுமிச்சை மரங்களில் இருந்து கடற்படையினர் தேசிக்காய்களை பறித்துவந்து அதைப் பிழிந்து நாவில் விட்டு சுவைக்கச் சொன்னார்கள். உணவும் தூக்கமுமில்லாத நேரத்தில் அந்தப் புளிச்சுவை உடலில் சக்தியிழப்பையும், சோர்வையும் தடுக்கும் என்பதற்காகவே அப்படிச் செய்தார்கள். வெள்ளத்தில் சிலகடைகளில் இருந்த பொருள்கள் மிதந்து வந்தன. அவற்றுள் பிஸ்கற் பெட்டிகளும் இருந்தன. அவற்றை மீட்ட கடற்படையினர், அந்த பிஸ்கற்றுகளை முதலில் தாங்கள் உண்டுபார்த்து, அது உட்கொள்ள உகந்ததுதான் என்பதை உறுதிசெய்தபின்னர் எமக்குத் தந்தார்கள்.



## தப்பிவந்த நாய்க்குட்டி

வெள்ளத்தில் பொருள்கள் மட்டும் வரவில்லை. கண்முன்னே ஆடுமாடுகள், பன்றிகள் கூட அடித்துச் செல்லப்படுவதைப் பார்த்தும் அவற்றைக் காப்பாற்ற முடியாதவர்களாக நின்றோம். அந்தச் சமயத்தில் நாய்க்குட்டியொன்று அந்த வெள்ளத்தில் தத்தளித்தபடி நாங்கள் இருந்த கூரைப்பக்கமாக வந்தது. அதனை மீட்டெடுத்து கூரையில் எம்மோடு வைத்துக்கொண்டோம். அதுவும் எங்களோடு ஒட்டிக்கொண்டு, வெள்ளத்தை பயத்தோடு பார்த்தபடி இருந்தது. இந்த ஒரு இரவைக் கடந்துவிட்டால் எல்லாம் சீராகிவிடும் என்ற சிறு நம்பிக்கையும் இருக்கத்தான் செய்தது., ஆனால் இந்த இரவைக் கடக்க வேண்டுமே? எங்களின் வேண்டுதல்கள், பிரார்த்தனைகளோடு அந்த பெருமழை கொட்டிக்கொண்டிருந்த அந்த இரவை வெள்ளக்காட்டின் நடுவே கடந்தோம்.

## எதிர்பாராத பயங்கரம்

29.12.2025-சனிக்கிழமை

நாங்கள் நினைத்தது போல இரவு கடந்தாலும், எங்களைச் சூழ்ந்திருந்த அபாயம் கடக்கவில்லை. நிலைமை இன்னும் மோசமானது. எங்கள் அச்சத்தை அதிகப்படுத்தும் வகையில் ஒரு பயங்கரம் நடந்தது.

எங்கள் 69 பேரின் பாரத்தையும் தாங்கமுடியாமலும், ஈரத்தாலும் அந்தக் கடைக்கூரையின் ஒருபகுதி சீற் திடீரென உடைந்து விழுந்தது. அவ்வளவுதான். அந்த சீற் பகுதியில் இருந்த சிலர் அப்படியே வெள்ளத்துக்குள் வீழ்ந்தனர். சாதாரண வெள்ளமென்றால் பரவாயில்லை. கலாவாவியில் இருந்து கட்டுக்கடங்காமல் வெறிகொண்டு பாயும் வெள்ளத்தில் விழுந்துவிட்டால் தப்புவதை நினைத்தும் பார்க்கமுடியாது. வெள்ளத்தில் வீழ்ந்தவர்களில் பெண்களும் இருந்தனர். அவர்கள் வீழ்ந்ததைக் கண்டதும் நாங்கள் அவர்களைக் காப்பாற்றுமாறு கத்திக் கூக்குரலிட்டோம். ஆனால் தெய்வாதீனமாக அந்த வெள்ளத்தில் வீழ்ந்து அடித்துச் செல்லப்பட்ட எம்மவர்களில் நால்வர் மரக்கொப்புகளில் சிக்குண்டு, தொடர்ந்தும் வெள்ளத்தில் இழுபட்டுப் போகாமல் தப்பினர். இதனால் உடனடியாகவே அந்த வெள்ளத்தில் குதித்த கடற்படையினர் அவர்களைப் பத்திரமாக மீட்டு மீண்டும் கடைக்கூரைக்கு கொண்டுவந்தனர்.



## எங்கே பத்மநிகேதன்?

எத்தனை பேர் உடைந்த சீற்றில் இருந்தனர் என்று எவருக்குமே தெரிந்திருக்கவில்லை. நால்வர் மட்டும் தான் விழுந்ததாகவும், அவர்களும் காப்பாற்றப்பட்டு விட்டார்கள் எனவும் தான் நாங்கள் நம்பினோம். ஆனால் சோகம் என்னவென்றால், தன்னுடைய போன் மூலம் எங்கள் அத்தனை பேரின் உயிரையும் காப்பாற்றிய பத்மநிகேதனும் அந்த வெள்ளத்துக்குள் வீழ்ந்துவிட்டார் என்பது அப்போது எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. தெரிந்திருந்தால் கடற்படையினர் அவரைத் தேடி மீட்டிருக்க முடியும். அவர் சீற் உடைந்து விழுந்ததும் மேலே வரமுடியாமல் எங்கோ சிக்குண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் எப்படியும் அவர் வெள்ளத்தில் அடிபட்டுச் செல்வதைக் கண்டு காப்பாற்றி இருக்கலாம். எல்லாம் விதி. எங்களுக்காக கடைசிமட்டும் போராடிய அந்த உன்னத ஆன்மாவை இப்படி எங்களுக்கு முன்னாலேயே, எங்களை அறியாமலேயே பறிகொடுத்துவிட்டோமே. அதுதான் எங்கள் எல்லோருக்கும் உள்ள மிகப்பெரிய கவலை.

(15ஆம் பக்கம் பார்க்க)




# பேய்வெள்ள முற்றுகைக்குள் பேருந்து..!

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

## இரண்டு நல்ல செய்திகள்

ஒருமாதிரி சீற் உடைந்து வீழ்ந்தவர்களைக் காப்பாற்றி விட்டோம் என்ற நிம்மதி. இந்தநிலையில் இரண்டு நல்லசெய்திகள் கிடைத்தன. ஒன்று, கலாவாவியின் வான்கதவுகள் மூடப்பட்டுவிட்டன. அதனால் மெல்ல மெல்ல வெள்ளம் கட்டுப்பாட்டுக்கு வரலாம். இன்னொன்று, ஹெலி மூலம் எங்களை மீட்கும் நடவடிக்கை தொடங்கப்போகின்றது. இந்தச் செய்திகளை அறிந்ததும் ‘போன உயிர் மீண்டு வந்தது போல’ இருந்தது. தூரத்தே ஹெலிகள் தென்பட, இன்னும் நம்பிக்கை அதிகரித்தது. ஆனால் அது அதிகநேரம் நீடிக்கவில்லை. நாம் ஒன்று நினைக்க, விதி வேறுவிதமாக விளையாடியது.



## தோற்றுப்போன ஹெலிகள்

ஹெலிகள் எம்மை நெருங்கிய போது, அவற்றின் காற்றாடிகளாலும், சத்தத்தாலும் உண்டான அதிர்வால் நாம் அமர்ந்திருந்த கடைக்கூரையின் சீற்றுகள் பலமாக ஆடத்தொடங்கின. ஒருகட்டத்தில் அவை வெடித்து விழுந்துவிடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டது. ஹெலிகள் இன்னும் தாழ்வாக வந்திருந்தால் நிச்சயமாக அத்தனை பேரும் வெள்ளத்துக்குள் வீழ்ந்திருப்போம். இப்படி ஹெலியால் மீட்க முயன்றால் எல்லோரையும் பலிகொடுக்க வேண்டியிருக்கும் என்பது விமானப் படையினருக்கும் புரிந்துவிட்டது.எனவே எங்களைக் ஹெலிமூலம் மீட்கும் முயற்சியைக் கைவிட்டு, வந்த வழியே ஹெலிகள் பறந்து போயின. பெரிய ஹெலிகள் வந்ததால் தான் இப்படி அதிர்வு ஏற்படுகின்றதென நினைத்து பின்னர் சிறியரக ஹெலி ஒன்று வந்தது. அதற்கும் அதே அதிர்வு, அதே அச்சம்தான். அந்தக் ஹெலியும் மீட்புநடவடிக்கையைக் கைவிட்டு திரும்பியது.

அடுத்தது என்ன? என்று எங்களுக்கும் தெரியவில்லை. வெள்ளம் கூரையை அடித்துச் சென்றுவிட்டால் நாங்கள் கூண்டோடு கைலாசம் போகவேண்டியதுதான். ஈரமாக இருந்த சீற்,எங்களின் பாரத்தை தாங்காமல் எந்தக் கணமும் உடைந்து விழலாம் என்ற நிலை. ஒவ்வொரு கணமும் உயிர் கொல்லும் கணமாகவே எங்களுக்குத் தெரிந்தது.

## நேவியின் படகா? நோவாவின் படகா?

எங்களைக் காப்பாற்றுவதற்கான எல்லாவழிகளும் அடைபட்டுவிட்டன என்று நாம் எண்ணிய நேரத்தில் ஒரு திருப்பம். பிரளயத்தால் இந்த உலகம் அழிந்த போது, நோவாவின் படகு தான் மக்களைக் காத்தது என்று பைபிளில் சொல்லப்பட்டிருக்கும். அதைப்போல எங்களைக் காக்கவும் நோவாவின் படகினைப் போன்று, வெள்ளத்தைக் கிழித்தபடி கடற்படைப் படகுகள் நாமிருந்த கடைக்கூரைக்கு வந்துசேர்ந்தன. ஒருகாலத்தில் எங்களை அழித்த ஹெலிகளும், கடற்படைப்படகுகளும் இப்போது எங்களை மீட்க வருவதும் விந்தைதான். கடற்படைச் சுழியோடிகள் கூரையில் இருந்த எங்களை கயிற்றின் மூலம் படகுக்கு மாற்றினார்கள். பின்னர் எங்கள் எல்லோரையும் வெள்ளப்பாதிப்பு இல்லாத பகுதிக்கு படகு மூலம் கடற்படையினர் கொண்டு வந்தனர். கடற்படையினர் எங்களைக் காப்பாற்றும் போது, எம்மிடம் வெள்ளத்தில் தத்தளித்து அடைக்கலமாகி இருந்த நாய்க் குட்டியையும் நாம் பத்திரமாகக் கொண்டுவந்து ஊர்மக்களிடம் கையளித்தோம்.

## மக்களின் அன்புவெள்ளம்

அந்த ஊர்மக்கள் எங்களை தங்கள் அன்பினால் திக்குமுக்காட வைத்துவிட்டனர். இனமத பேதமின்றி, ஆபத்தில் இருந்து தப்பியவர்கள் என்ற அனுதாபத்தில் பேருதவி செய்தார்கள். துண்டுகிடந்த எங்கள் மனங்களுக்கு தேநீர், வெந்நீர், குளிர்பானங்கள், ஆடைகள், உணவுகள் என்று தங்கள் உபசரிப்பினால், ஒத்தடம் தந்தார்கள் அந்த மக்கள்.

கிராம உத்தியோகத்தர்கள், படையதிகாரிகள், மருத்துவர்கள் என எல்லோரும் இணைந்து அம்புலன்ஸ் மூலம் நொச்சியாகம ஆதார மருத்துவமனைக்கு எம்மைக் கொண்டு சென்று சேர்த்தனர். நொச்சியாகம ஆதார மருத்துவமனையில் மருத்துவர்களும், தாதியர்களும் எங்கள் எல்லோரையும் அன்பாக உபசரித்தனர். விடுதிகளில் தங்கவைத்து, சகல உடற் பரிசோதனைகளையும் மேற்கொண்டனர். அதுவரை ஈர உடுப்போடு , உடல் விறைத்தபடி இருந்த எமக்கு நல்ல ஆடைகளை அணியத்தந்தார்கள். அவர்களின் மருத்துவக் கவனிப்பிலும், அன்பிலும் மிகவிரைவாகவே எமது உடல்நிலை தேறிவிட்டது. எங்களோடு இருந்த ஒரு முதியவர் சிகிச்சையின் போது உயிரிழந்தார் என அறிந்து கவலையுற்றேன். அதே போன்று நாங்கள் மீட்கப்பட்ட பின்னர் எம்மோடு இருந்த பத்மநிகேதனின் சடலமும் மீட்கப்பட்ட செய்தி இதயத்தை சுக்குநூறாக்கியது.

## மீளுகை...!

*30.11.2025* ஞாயிற்றுக்கிழமை.

நாம் வீடுகளுக்குச் செல்ல மருத்துவ அதிகாரிகளால் அனுமதி வழங்கப்பட்டது. எங்களை வீட்டுக்கு கூட்டிச்செல்லுமாறு குடும்பத்தாருக்கு தகவல் வழங்கினோம். எனது மாமனாரின் துணையுடன், என் பெற்றோர் வந்து, என்னையும், என் நண்பர்களையும் மருத்துவமனையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்தனர்.


இந்தப் பேரிடர் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் உதவிய எங்களது ஜனாதிபதி அநுர திஸாநாயக்க, மருத்துவர்கள், படையதிகாரிகள், கடற்படையினர், இராணுவத்தினர், விமானப்படையினர், கிராம உத்தியோகத்தர்கள், பொலிஸார், மன்னார், புத்தளம் மாவட்டச் செயலர்கள், ஊர் மக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், நண்பர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அனைவரையும் எப்போதும் மறவேன். அத்தோடு எங்களை மீட்பதற்காக தன்னுயிரையே கொடுத்த சகபயணியும், உன்னத ஆன்மாவுமான பத்மநிகேதனும், அவன் தியாகமும் என்றும் எங்களோடு நிழலாகப் பின் தொடரும்.



நன்றி: உதயன் - சஞ்சீவி 07.12.2025

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI





# எதிர்ப்பக்கம்

### களத்தில் நில்லுங்கள் , கடவுள் உங்களுக்காகப் போராடுவார்

கடந்த மாதம் மும்பையில் நடந்த இந்தியா - ஆஸ்திரேலியா இடையேயான அரையிறுதிப் போட்டியைப் பார்த்தவர்கள் உலகின் மிகவும் அதிர்ஷ்டசாலிகள் என்று நான் கூறுவேன். டிவியில் நேரலையாக பார்த்தவர்களும் கொடுத்துவைத்தவர்களே. நானும் அந்த அற்புதமான போட்டியைப் பார்த்த அதிர்ஷ்டசாலிகளில் ஒருவன் (இந்த அற்புதமான தருணங்களுக்காக சில நாட்களில் அதிகாலை 5 மணி வரை விழித்திருப்பது கூட ஒரு தவமே )

பெண்கள் கிரிக்கெட் உலகின் மிகச்சிறந்த இலக்கை துரத்தல் போட்டிகளில் ஒன்றை இந்திய அணி விளையாடிய விதம் அருமையாக இருந்தது. நீங்கள் 60/2 என்ற கணக்கில் கீழே இருந்த இக்கட்டான நேரத்தில் அதுவும் குறிப்பாக உங்கள் நட்சத்திர வீராங்கனை (ஸ்மிருதி மந்தனா) ஆட்டமிழந்த சூழ்நிலையில் ஜெமிமா ரோட்ரிக்ஸ் மற்றும் ஹர்மன்ப்ரீத் கவுர் மிகவும் அற்புதமாக விளையாடினார்கள். அவர்கள் இலக்கில் மட்டுமே கவனம் செலுத்தினர், அமைதியாக ஸ்ட்ரைக்குகளை சுழற்றினர் மற்றும் ஒவ்வொரு அடியும் மிகவும் நேர்த்தியாக விளையாடினர்.

மொத்த போட்டியிலும் தன்னிகரற்று நின்ற ஒரே வீரர் வேறு யாருமல்ல, ஜெமிமா ரோட்ரிக்ஸ், தனது சொந்த சாதனைகளைப் பற்றிக் கூட கவலைப்படாமல் (தனது சொந்த சாதனையான 100 ரன்கள் அடித்ததையும் கொண்டாடவில்லை ) விளையாடினார். ஆட்டத்தின் கடைசி மூன்றாவது கட்டத்தில் அவள் மிகவும் சோர்வாக இருந்தபோதிலும் தளராமல் விளையாடினாள் .என் வாழ்க்கையில் நான் பார்த்ததிலேயே மிகச்சிறந்த இன்னிங்ஸில் ஒன்றை உருவாக்க முடிந்தது ( கடந்த ஆண்டு கிளென் maxwell இன்னிங்ஸ் பார்க்க கிடைத்ததும் பாக்கியமே )

நாம் இந்திய அணியிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும், அவர்கள் ஒரு குழுவாக விளையாடினார்கள், ஒருவருக்கொருவர் ஆதரவளித்தார்கள், உந்துதல் பெற்றார்கள் மற்றும் இலக்கை நோக்கி கவனம் செலுத்தினார்கள்.

POTM விருதைப் பெற்ற பிறகு ஜெமிமா ரோட்ரிக்ஸ், "களத்தில் நில்லுங்கள் , கடவுள் உங்களுக்காகப் போராடுவார்" என்று கூறினார். என் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அதே போன்று இறுதிப் போட்டியை இந்திய அணி வென்று சாதனை புரிந்தபோதும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இந்தியப் பெண்கள் அணிக்கு இது பொன்னான நேரம்.

### புத்தகங்களே என்றும் நமது துணைவன்

நவம்பர் 18 - உலக புத்தக தினம் . புத்தகத்தின் மேலான இந்த கிறுக்கு அல்லது காதல் என்று வந்தது என்று நிச்சயமாக சொல்ல முடியாது.

சிறுவயதில் என் தந்தையுடன் கம்யூனிஸ்ட் கட்சியின் படிப்பகத்தில் தீக்கதிர் செம்மலர் படிக்க ஆரம்பித்து, எனது பள்ளி நூலகத்தில் ஜெயகாந்தனின் "அக்கினிப்பிரவேசம்" படித்தது இன்னும் நெஞ்சில் மாறாமல் இருக்கிறது. அதன் பிறகு வாசிப்பானது சுஜாதாவில் ஆரம்பித்து எங்கெங்கோ சென்று , சாரு நிவேதிதாவின் கோணல் பக்கங்கள் வாயிலாக ஜெயமோகன் அறிமுகம். பிறகு விடாமல் அசோகமித்திரன், அ .முத்துலிங்கம்,வண்ணதாசன் ,புதுமைப்பித்தன், ஆத்மாநாம், பி.ஏ.கே , இ.பா , தி,ஜானகிராமன் , கி,ரா ,யுவன் என்று தொடர்ந்து புத்தகங்களுடன் வசிக்கிறேன். பிழைப்பிற்காக அந்நிய நாடு புகுந்த பிறகு விடாமல் தொடரும் பழக்கம், புத்தக வாசிப்பு. ஒவ்வொரு புத்தகமும் வாசித்த பிறகு நான் எவ்வளவு சிறியவன் என்பதை ஒவ்வொரு நாளும் எனக்கு சொல்லுகின்றன

எதற்காக புத்தகம் படிக்கிறாய் என்று யாராவது என்னிடம் கேட்டால், "பெரிதினும் பெரிது கேள்" என்று பதில் சொல்வேன். புத்தகங்களின் உலகில் சென்றால் மீண்டும் வர முடியாது என்று சொல்வார்கள். மீண்டு வரவேண்டாம். தொலைந்து போய்விடுங்கள்.

கற்றது கைமண்ணின் தூசி அளவு ..கற்கவேண்டியதோ பிரபஞ்சமளவு - நாள்தோறும் மேலும்மேலும் படிக்க இந்த உண்மையின் பொருளை இன்னும் நிச்சிதமாய் நெஞ்சில் ஏந்திக் கொள்ள முடிகிறது.. காலம் எனும் ஆதி ,அந்தம் அற்ற பயணத்தில் புத்தகங்களே என்றும் நமது துணைவன்.. அன்பெனும் கால நதியில் , புத்தகங்களோடு பயணிப்போம் நண்பர்களே !!!

### க .க. போ

சச்சின் டெண்டுல்கர் 1994 வரை ஒரு நாள் விளையாட்டு போட்டிகளில் 4 ,5 மற்றும் 6 ஆவது இடங்களிலேயே எப்பொழுதும் விளையாடிக்கொண்டிருப்பார் . அவருக்கு முன்னால் விளையாடும் வீரர்கள் அனைத்து பந்துகளையும் பொதுவாக விரயம் செய்து இவர் விளையாடும்போது ஏறக்குறைய ஆட்டம் முடியும் தறுவாயில் இருக்கும். அவரால் ஒரு சதம் கூட அடிக்க முடியவில்லை. ஆனால் 1994 ஆம் ஆண்டு நியூஸிலாந்துக்கு எதிரான போட்டியில் நவஜோத்சிங் சித்துவிற்கு காயம் ஏற்பட்டதால் ,யார் முதலில் இறங்கி விளையாடுவது என்ற குழப்பம் அணியில் இருந்தது. அப்போது சச்சின், அணியின் கப்டனான அசாருதீனுடன் சென்று நான் முதலில் இறங்கி விளையாடுகிறேன் என்று சொல்லி நியூஸிலாந்தின் பந்து வீச்சினை நொறுக்கி எடுத்து 49 பந்துகளில் 89 ஓட்டங்கள் எடுத்தார்.அதன் பிறகு அவர் எடுத்த ரன்கள் எல்லாம் வரலாறு.

இதே போன்று இங்கிலாந்திற்கு எதிரான ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலிய அணியில் யார் முதலில் இறங்குவது என்று ஒரே குழப்பம் . அதாவது எப்போதும் தொடக்க ஆட்டக்காரராக இறங்கி விளையாடும் உஸ்மான் க்வாஜா முதுகுபிடிப்பு காரணமாக விளையாட முடியாத சூழ்நிலை. 2 ஆவது இன்னிங்சில் வெற்றி பெற 205 ரன்கள் தேவை என்ற போதிலும், முதல் இன்னிங்சில் ஆஸ்திரேலியா 132 ரன்களுக்கு சுருண்டதால், அவர்களுக்கே தாங்கள் எங்கே மறுபடியும் சொதப்பி விடுவோம் என்று பயம். அதுமட்டுமின்றி யாரும் பார்மில் இல்லாத காரணத்தால் தோல்வி பயம் சூழ்ந்திருந்தது என்றே சொல்ல முடியும். அப்போது டிராவிஸ் ஹெட், அணித்தலைவர் ஸ்மித்துடன் சென்று நானே முதலில் இறங்கி விளையாடுகிறேன் என்று இங்கிலாந்து பந்துவீச்சாளர்களின் பந்துகளை நொறுக்கிஎடுத்தார். நாம் டெஸ்ட் போட்டி பார்க்கிறோமோ இல்லை டி20 போட்டி பார்க்கிறோமோ என்று சந்தேகமே வந்துவிட்டது. அவரின் அபாரமான ஆட்டத்தினால் இங்கிலாந்து அணிக்கு ஜெயிப்போம் என்ற நம்பிக்கை முதலிலேயே போய்விட்டது.

நாங்கள் விளையாடும் காலங்களில் காட்டடி கந்தசாமி என்று அழைக்கப்படும் ஒருவர் எல்லா அணியிலும் இருப்பார். அவருக்கு நளினமாக விளையாடுவதெல்லாம் தெரியாது . விளையாட இறங்கினால் கண்மூடித்தனமாக எல்லா பக்கமும் அடித்து விட்டு எதிரணியினருக்கு கிலி ஏற்படுத்துவது மட்டுமே இவர்களின் வேலை. அந்த வேலையினை டிராவிஸ் ஹெட் மிகைத்திறமையாக செய்துகாட்டினார்.

முதல் போட்டியை வென்று ஆஸ்திரேலியா 1-0 என்று முன்னணியில் இருக்கிறது. பேஸ்பால் என்று இதுவரை பம்மாத்து காட்டிய இங்கிலாந்து அணியினருக்கு மரண பயத்தை காட்டிவிட்டார் ஹெட். இனி வரும் போட்டிகளில் இங்கிலாந்து என்ன செய்யப்போகிறது என்று பார்க்க வேண்டும்.

அது சரி அது என்ன கா .க. போ ( வாய்ப்புகளை கச்சிதமாக கவ்விகொண்டாய் போ ).நாம் எல்லோருக்கும் இயற்கை எப்போதும் சரிசமமாக வாய்ப்புகளை அள்ளிக்கொடுக்கிறது. நாம் எதனை எப்பொழுது தேர்வு செய்துகொள்கிறோம் அல்லது நமக்கு கிடைக்கும் வாய்ப்புகளை சரியாக பயன்படுத்திக்கொள்கிறோம் என்பதில் தான் நமது வெற்றியே இருக்கிறது. அதாவது ஒருவேளை 1994ல் சச்சின் அசாருதீனுடன் கேட்காமல் இருந்திருந்தால் ,நாம் டெண்டுல்கரின் உலகளாவிய சரித்திரம் நிகழாமலேயே போயிருக்கும். அதே போன்று தான் Travis Head ,ஸ்மித்துடன் தனக்கான வாய்ப்பை கேட்காமலிருந்தால் ,இங்கிலாந்து வெற்றி பெற்றிருக்கும் வாய்ப்பு அதிகம். கேளுங்கள், வாய்ப்புகளைத் தவற விட வேண்டாம்

### எப்படி என்பதை விட என்ன என்பதே முக்கியம்

நான் பெரிதும் யோசித்து வியப்பது என்னவென்றால் இந்த இயற்கை எல்லாவற்றிற்கும் சமமான வாய்ப்பு தந்திருக்கும்போது அது எப்படி ஒரு சிலர் மட்டும் உயரே உயரே செல்ல முடிகிறது என்று. அதற்கு காரணம் என்ன என்று கேட்டால் கவனகுவிப்பு , வெளிப்படுத்தும் திறன் ( கம்யூனிகேஷன்) மற்றும் இயற்கையில் அமைந்த புத்திசாலித்தனம் . இது மூன்றும் வேண்டும் . ஏதாவது ஒன்று இருந்து மற்ற இரண்டும் இல்லையென்றால், சிரமம் தான் . அப்புறம் வாய்ப்புகளை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வது. இங்கே பாருங்கள் கோபிநாத் , தொலைக்காட்சி ஊடகத்தில் கோலோச்சி வருகிறார். ஆனால் சமூக ஊடகங்களின் வரவால் மரபான ஊடகங்களின் சரிவு கண்டு அசராமல் தன் திறமையை பயன்படுத்தி , யூடியூப் சேனல் தொடங்கி அதில் தன் எல்லையை விரிவுபடுத்தி வருகிறார்.

காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்ற பழமொழிக்கேற்றபடி கோபிநாத் காலம் மாறும்போது தனக்கென தேவையானதை தேர்வு செய்ய நன்றாகவே தெரிந்திருக்கிறார். இந்த செயற்கை நுண்ணறிவு யுகத்தில் கோலோச்சும் தமிழர்களைப் பேட்டி கண்டு, அதை திறம்பட விளம்பரம் செய்து தகவமைவும் திறனை நாம் பாராட்டியே ஆகவேண்டும்.

இதுவரை அவர் எடுத்த பேட்டிகளில் நான் மிகவும் ரசித்து வியந்து பார்த்தது , OpenAI CtO ஸ்ரீனிவாஸ் நாராயணன் உடனான இந்த பேட்டி தான். எவ்வளவு உயர்ந்த பதவியில் இருந்தால் கொஞ்சம் கூட தலைக்கனம் இல்லாமல் கோபிநாத்தின் கேள்விகளுக்கு (அவரது கேள்விகள் நமக்கே சில சமயம் எரிச்சல் தந்தாலும்), ஸ்ரீனிவாஸ் மிகத்தெளிவாக, நேரிடையாக எல்லோருக்கும் புரியும்படி தமிழில் பதில் தருகிறார். நிறைகுடம் தளும்பாது என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம்.

இந்த நேர்காணல் ஏறக்குறைய 1 மணி நேரம் இருந்தாலும், பல சிக்கலான விஷயங்களை மிக அருமையாக விளக்கியிருக்கிறார். குறிப்பிட்டு சொல்ல வேண்டுமென்றால் ,

1. AI -உலகில் எப்படி ஒரு தயாரிப்பை கொண்டு வரவேண்டும் என்பதெல்லாம் மிக எளிதான காரியம். என்ன செய்ய போகிறீர்கள் என்பதில் தான் வெற்றியின் சூட்சுமம் இருக்கிறது என்கிறார். What is more important than How? Because AI tools will simplify the delivery . Hence how is not a question anymore.

2. When you build something , you shouldn't be worried about the next model, i.e You shouldn't be scared of the new model will replace your product. உங்கள் புத்தொழில் நிறுவனத்தின் தயாரிப்பானது , AI நிறுவனங்களின் புதிதாக வெளிவரப்போகும் மிகப்பெரும் மொழி மாதிரிகளை (Large Language Model ) கண்டு அஞ்சக்கூடாது. அதாவது இந்த மாதிரிகள் உங்கள் நிறுவனத்தை ஓரங்கட்டிவிடும் அளவில் உங்கள் தயாரிப்பு இருக்கக்கூடாது.

3. We should be able adopt all the features of these Large Language Models and continue to solve the world problems. - இந்த அனைத்து நுட்பங்களையும் பயன்படுத்தி புதுப்புது நிரலிகளைக் கண்டுபிடிக்கவேண்டும். ஏனென்றால் இந்த உலகில் இன்னும் தீர்வு காணமுடியாத எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன.



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

4. Will AI replace Humans ? Definitely not - இந்த AI செயலிகள் மனிதனை ஓரங்கட்டி விடுமா ? நிச்சயமாக இல்லை என்கிறார். உதாரணத்திற்கு செஸ் விளையாட்டில் கணினிகள் என்றைக்கோ மனிதனை வென்றுவிட்டன . ஆனால் இரண்டு கணினி விளையாடும் செஸ் விளையாட்டினை யாரும் பார்க்க மாட்டார்கள். AI அனைத்து துறைகளிலும் கண்டிப்பாக வரும். ஆனால் மனிதனை ஓரங்கட்டாது. நாம் இன்னும் நன்றாக இந்த தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி இன்னும் நமது வேலைகளை இலகுவாக்கிக்கொள்ள வேண்டும் என்கிறார்.நாம் அனைவரும் தவறாமல் பார்க்க வேண்டிய உரையாடல். கண்டிப்பாக பாருங்கள் நண்பர்களே

### The ballad of Buster Scruggs - உணவின் விலை

ஒரு சில படங்கள் தான் சில நேரம் நம்மை தொந்தரவு செய்யும் . ஆனால் சில படங்கள் நம்மை அலைக்கழித்துவிடும். நம்மை சிலநாட்கள் தூக்கம் இல்லாமல் தொடர்ந்து கேள்வி கேட்கவைத்துவிடும். கோயன் சகோதரர்களின் எல்லாப் படங்களும் எனக்குப் பிடிக்கும் ( இவர்களின் மற்ற படங்களை பற்றி தனியே எழுதவேண்டும் ). நான் முன்பெல்லாம் இவர்களின் படங்களைத் தேடித் தேடிப் பார்த்த காலங்களுண்டு. இப்போது வேலைப்பளு காரணமாக முன்பு போல நிறைய நேரம் செலவழிக்க முடிவதில்லை. இவர்கள் கடைசியாக இயக்கிய படம் The ballad of Buster scruggs . இந்தப் படம் வெளியாகி 7 வருடங்களுக்கு மேல் ஆன போதிலும், என்னால் கடந்த வாரம் தான் பார்க்க முடிந்தது.

Antholoபல எனப்படும் பல சிறுகதைகள் அடங்கிய வடிவமான இந்த படத்தில் 6 கதைகள். ஒவ்வொரு கதையும் அவர்களின் கலைவடிவமான அவல நகைச்சுவை ( Dark Humuor) மற்றும் மனிதனின் ஆதுர குணங்களான கருணை ,வன்முறை, காமம் போன்றவற்றை சிறப்பாக தங்களுக்கேயுரிய பிரத்யேக திரைமொழியில் சொல்லியிருக்கின்றனர்.ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு விதத்தில் சிறப்பு எனினும் ,என்னை இன்றுவரை தொந்தரவு செய்வது இந்தப் படத்தில் வரும் Meal Ticket எனும் உணவின் விலை என்ற பகுதி.

இந்த கதையானது அமெரிக்காவில் 19 ஆம் நூற்றாண்டின் பின்பகுதியில் நடக்கிறது. அந்தக்காலத்தில் ஊர் ஊராக சென்று நாடகம் போடுவார்கள் தானே. அது போன்று Liam Neeson தன்னுடன் கைகள் மற்றும் கால்களை இழந்த ஆனால் திறமையான ஒரு நடிகனை கொண்டு ஊர் ஊராக சென்று ."Ozymandias," the tale of Cain and Abel, Shakespeare's sonnets, the Declaration of Independence, and Puck's final soliloquy in A Midsummer Nights Dream போன்ற கலைப்படைப்புகளை தனிஆவர்த்தனம் ( குரல் நடிப்பு ) செய்கிறார். அப்போது மக்கள் வழங்கும் வெகுமதியை சேகரித்து தங்களுக்கான உணவை சம்பாதிக்கின்றனர் ( தனக்கும் , ஊனமுற்ற குரல் நடிகனுக்கும்). நாம் கவனிக்க வேண்டியதென்னவென்றால் மொத்த படத்திலும் இரண்டு பேரும் ஒரு வார்த்தை பேசமாட்டார்கள் குரல் நடிகனின் நாடகத்தில் வரும் வசனங்கள் தவிர - அவனது கையறு நிலையைச் சொல்லுகின்றனர்). தொடக்கத்தில் இவர்களது கலை நிகழ்ச்சியை பார்க்க மக்கள் கூட்டம் நிறைய வருகிறது. பிறகு சில ஊர்களில் அவ்வளவாக ஆதரவில்லை (அந்த நாட்களில் குரல் நடிகனுக்கு எந்த உணவும் கிடையாது -வேதனையுடன் தனது முதலாளியைப் பார்க்கிறான்). நாட்கள் செல்ல செல்ல யாரும் வருவதில்லை. ஒரு ஊரில் கோழியை காட்டி நடக்கும் வித்தைக்கு மக்களின் ஆதரவை பார்க்கும் முதலாளி , அந்த கோழியை விலைக்கு வாங்குகிறான் .பிறகு மூன்று பேரும் பயணிக்கின்றனர். முதலாளிக்கு ஒரு யோசனை வருகிறது. எதற்கு மூன்று பேர்?. ஊனமுற்றவனால் எந்த பிரயோஜனமுமில்லை, அவனை பராமரிப்பதும் மிகவும் சிக்கல் ( உணவளிப்பது, உடை மாற்றுவது, இயற்கை உபாதைகளை தீர்த்துக்கொள்ள உதவுவது என்று பல ) . இறுதியில் என்ன செய்கிறான் என்று கதை.

என்னைத் தொந்தரவு செய்த கதை. இந்தப் படம் பார்த்து விட்டு தூக்கம் போயிற்று. மனிதன் இன்னொருவனை வெறும் தேவைகளுக்காக மட்டுமே சார்ந்து இருக்கும்போது ,அந்த தேவைகள் தீர்ந்துபோனால் நாம் என்ன செய்வோம்? அறம் என்பது என்ன ? .இலக்கியமும் ,கலைகளும் வெறும் குறளி வித்தைகள் முன்பு தோற்றுப்போவதற்குத்தானா?. நமக்கு சலிப்பு ஏற்பட்டால் மனித விழுமியங்கள் என்னவாகும் என்று பல கேள்விகள்.

இந்த படத்தில் குரல் நடிகனாக நடித்தவரின் நடிப்பு அற்புதம். ஒரு உரையாடலும் இல்லாமல் மொத்த உணர்ச்சிகளையும் தனது முகத்தில் காட்டியிருப்பார். அதிலும் இறப்பதற்கு சிறு நொடிகள் முன்பு அவரது முகம் காட்டும் உணர்ச்சிக்குவியல் அற்புதம்.படம் முடிந்து வெகு நாட்கள் ஆன பிறகும் நெஞ்சில் நிலைத்து நிற்கும் பிம்பம். நாம் பிம்பங்களின் வழியே நம் நினைவுகளை சேகரித்து வைக்கிறோம். இந்த பிம்பமானது என் நெஞ்சில் என்றும் நிலைத்து நிற்கும்.

கண்டிப்பாக பார்க்க வேண்டாம். உங்கள் தூக்கம் போய்விடும் .சில நாட்கள் உங்களை நிம்மதியில்லாமல் செய்துவிடும்.


SST
SPICES
& Things
Indian | Sri lankan | South Asian
Groceries & Take away
At SST Spices & Things, we pride ourselves on delivering top-notch customer service and offering high-quality food and groceries. Whether you're picking up your favorite spices, fresh produce, or delicious takeaways, we've got you covered!
7 days
10 am to 8 pm
SST Spices
& Things
Where quality meets
community
Location:
79 McIntyre Rd,
Sunshine North VIC 3020
Contact:
03 9417 2517
Email:
sstspicesnthings@gmail.com

# Sai Shree Foods Pty. Ltd.

**AUSTRALIA - CANADA - INDIA**

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




**If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.**

**We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)**

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI










# சுனாமி 2004 உதவியை நிறுத்திய ஜே.வி.பி.!

# P-TOMS நிராகரிப்பு - ஜே.வி.பி.யின் வரலாற்றுத் துரோகம்!

● நவீனன்

**2004** ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி காலையில் ஆழிப் பேரலை வடக்கு, கிழக்கு கரையோரங்களை கடுமையாகத் தாக்கி அழிவுகளை ஏற்படுத்திக் கொண்டது. இந்த ஆழிப் பேரலையின் பயங்கரத்தையும் அதன் நாசகாரமான அழிவுகளையும் தமிழ் மக்கள் பெரும் துயராகவும் பேரழிவுகளாகவும் நீண்ட காலம் அனுபவித்துக் கொள்ள வேண்டிய அவல நிலை ஏற்பட்டது.

### ஆழிப்பேரலையும் வடக்கு-கிழக்கும்:

இந்த ஆழிப் பேரலையைத் தொடர்ந்து வெளிநாடுகளின் உதவிகள் பெருந்தொகையில் அரசாங்கத்திற்கும் அரசு சாரா நிறுவனங்களுக்கும் தாராளமாகக் கிடைத்தன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அன்றைய ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கம், கிடைத்த வெளிநாடுகளின் உதவிகொண்டு நிவாரணம் வழங்க முன்வந்தது. ஆனால் வடக்கு- கிழக்கின் பெரும்பகுதி குறிப்பாக ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேசங்கள் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. இந்தப் பிரதேசங்களில் சுமார் முப்பதினாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் ஆழிப் பேரலையால் கொல்லப்பட்டனர்.

இத்தகைய சூழலில் கடும் பாதிப்பை அடைந்த வடக்கு - கிழக்கு மக்களுக்கு நிவாரணமும் மறுவாழ்வும் வழங்குவதை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் ஏற்றுக் கொண்டனர். இதனை நோர்வேயும் இணைத்தலைமை நாடுகளும் வலியுறுத்திக் கொண்டன.

2004இல் சுனாமியால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு உட்பட ஆறு மாவட்டங்களில் சர்வதேச உதவிகளைச் சமமாக விநியோகிக்க, இலங்கை அரசாங்கமும் புலிகளும் இணைந்து ஒரு தற்காலிக மனிதாபிமான கட்டமைப்பை (Post-Tsunami Operational Management Structure - P-TOMS) அமைக்கும் உடன்படிக்கையில் ஜூன் 24, 2005 அன்று கையெழுத்திட்டு இருந்தனர்.

### P- Toms கட்டமைப்பு :

அரசாங்கமும் விடுதலைப் புலிகளின் நிர்வாக அரசும் வடக்கு-கிழக்கில் சுனாமி நிவாரணத்தை முறையாக வழங்குவதற்கான இணக்கப்பாட்டிற்கு வந்தனர். அதற்கான ஒரு நிவாரண நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கிக் கொண்டனர்.

இரு தரப்பினர்களுக்கிடையிலும் சமூகங்களுக்கிடையிலும் ஒத்துழைப்பதற்கு வசதியளிப்பதற்கான தேவை இருப்பதால்



P-Toms என்ற ஒப்பந்தத்தினை செய்து கொள்ள இரு தரப்பினரும் இணங்கிக் கொண்டனர்.

அதாவது சுனாமிக்குப் பின்னரான தொழிற்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப்பு ஒன்றை (P-Toms) அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) ஒன்றுக்கு அரசாங்கமும் புலிகளின் அமைப்பும் இணங்கிக் கொண்டன.

இந்தப் P-Toms அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமானது அமைப்பு என்ற முதலாவது பிரிவு தொடக்கம் நிறைவேற்றுகை என்ற ஒன்பதாவது பிரிவு வரை பல்வேறு பயன் உள்ள நடைமுறைச் சாத்தியமான பிரதான அம்சங்களையும் உப அம்சங்களையும் உள்ளடக்கியிருந்தது. இது நடைமுறைக்கு வந்திருக்குமானால் ஆழிப்பேரலையால் அழிவுகளுக்கும் பாதிப்புகளுக்கும் ஆளாக்கப்பட்ட வடக்கு- கிழக்கின் ஆறு மாவட்டங்களைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் பயனும் நிவாரண உதவிகளும் பெற்றிருப்பர்.

பல பில்லியன் கணக்கான டொலர் உதவிகளை உலக நாடுகள் வழங்க காத்திருந்தன. ஆனால் இன்றைய ஆளும் அரசான ஜே.வி.பி. கட்சியினர் இந்த உடன்படிக்கையை புலிகளுக்குச் சலுகை என்றும், தேசத்துரோகம் என்றும் சித்திரித்து, சிங்களப் பகுதிகள் முழுவதும் பெரும் போராட்டத்தை நடத்தினர்.

புலிப் பயங்கரவாதிகளுடன் பொதுக் கட்டமைப்பு வேண்டாம் என்று கூறிய அவர்களுக்கு தமிழர்களுக்கு அவசர உதவி சென்றடைவதை விட, அரசியல் நலனே முக்கியமானதாக இருந்தது. அந்தக்கால கட்டத்தில் இந்த இனவாதப் பிரசாரத்தை முன்னெடுத்தவர்களில் விமல் வீரவன்ஸ மற்றும் சோமவன்ச அமரசிங்க போன்றோர் முக்கியமான பங்கு வகித்தனர். இதன் விளைவாக, ஜே.வி.பி. தொடர்ந்த சட்டப் போராட்டத்தின் மூலம், ஜூலை 15, 2005 அன்று உச்ச நீதிமன்றம் P-TOMS உடன்படிக்கையின் முக்கியமான பிரிவுகளுக்குத் தடை உத்தரவு விதித்தது.

இதனால், தமிழர்கள் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குக் கிடைக்க வேண்டிய சர்வதேச உதவிகளும் மறுசீரமைப்புப் பணிகளும் முற்றிலுமாக நிறுத்தப்பட்டன.

### வரலாற்றுத் துரோகம்:

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கு மக்களுக்குக் கிடைக்க இருந்த நிவாரணத்தை முடக்குவதற்கு ஜே.வி.பி. பரந்துபட்ட எதிர்ப்பிரசாரத்தில் ஈடுபட்டது. அத்துடன் நின்றுவிடாமல் பேரினவாத சட்ட வல்லுநர்களின் தீவிர ஆலோசனையைப் பெற்று உயர்

நீதிமன்றத்தில் P-Toms கட்டமைப்பு ஒப்பந்தத்திற்கு எதிரான வழக்கு ஒன்றை தொடுத்து அதில் வெற்றியும் பெற்றுக் கொண்டது. அதன் மூலம் சுனாமியால் வடக்கு-கிழக்கின் அவலங்கள் இழப்புகளுக்கு உள்ளான மக்களுக்கு ஜே.வி.பி தனது பேரினவாத நிலைப்பாட்டின் ஊடாகப் பெரும் துரோகமிழைத்து கொண்டது.

இது ஜே.வி.பி. பேரினவாதிகளை விட மோசமான இனவாதக் கட்சி என்ற கணிப்பை நூற்றுக்கு நூறு வீதம் நிரூபித்துக் கொண்டது. ஆழிப்பேரலையின் அழிவை எதிர்கொண்ட வடக்கு- கிழக்கு மக்கள் ஏற்கனவே யுத்த அழிவுகளை எதிர்கொண்ட மக்களாகவே இருந்து வந்தனர்.

ஜே.வி.பி. ஆழிப்பேரலை நிவாரணக் கட்டமைப்பை உயர்நீதிமன்றத் தீர்ப்பைப் பெற்று அதனைச் செயற்படவிடாது தடுத்துக் கொண்டதுடன் நின்று விடவில்லை. அந்த உற்சாகத்தில் பல வருடங்களாக இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இருந்து வந்த வடக்கு- கிழக்கு என்று ஒரே மாகாண அலகாக இருந்து வந்ததையும் உயர்நீதி மன்ற வழக்கின் மூலம் பிரித்துக் கொண்ட பேரினவாத கைங்கரியத்தையும் செய்து கொண்டது.

இதற்கான முன் ஆலோசனையையும் வழிகாட்டலையும் பேரின வாதச்சட்ட வல்லுநர்கள் மட்டுமன்றி நீதித்துறையின் உச்சத்தில்

இருந்தவர்களும் இணைந்தே செயலாக்கினர். நீதித்துறை சுயாதீனமானதும் சுதந்திரமானதும் பக்கசார்பற்றதும் என்று கட்டமைத்துப் பரப்புரை செய்யப்பட்டு வந்தமையானது இதில் வெட்ட வெளிச்சமாகி அம்பலமாகிக் கொண்டது. ■


CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
282-284, londales st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


PAINTING SERVICES
INTERIOR AND EXTERIOR
TIMBER FLOORING
supply and installation
DECKING
BUDGET FRIENDLY HOME IMPROVEMENTS
Contact : 040 0287 198


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

# மாதராசிபலன்



## மேடம்

மேஷ ராசி அன்பர்களே எதிலும் வெற்றியே ஏற்படும். எதிரிகள் பணிந்து போவர். அவர்களால் மறைமுக ஆதாயமும் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அரசாங்கக் காரியங்கள் தாமதமாகவே முடியும். வழக்குகளால் மனதில் ஓர் அச்ச உணர்வு ஏற்படக்கூடும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனால், மாதப் பிற்பகுதியில் சகோதரர்களுடன் சிறுசிறு கருத்து வேறுபாடு ஏற்பட்டு சரியாகும். எடுத்த காரியங்கள் அனுகூலமாக முடியும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். திருமண முயற்சிகள் கைகூடும்.

## இடபம்

முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். வழக்குகளில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. முன்னேற்றத்துக்குத் தடை இருக்காது. புதிய பொருள்களின் சேர்க்கை உண்டாகும். சிலருக்கு பயணங்களும் அதன் மூலம் ஆதாயமும் ஏற்படும். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். ஆனால் குடும்பத்தில் அடிக்கடி வீண் விவாதம், கணவன் – மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றக்கூடும். ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

## மிதுனம்

குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் காணப்படும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். திருமணம், வளைகாப்பு போன்ற சுபநிகழ்ச்சிகளால் வீட்டில் மகிழ்ச்சி நிலவும். பொறுமையுடன் இருப்பது மிகவும் அவசியம். மாதத்தின் பிற்பகுதியில் எதிரிகளால் பிரச்சினைகளும், கடன் தொல்லைகளும் ஏற்படக்கூடும். ஆனாலும், குரு பலத்தால் சமாளித்துவிடுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். சிலருக்கு வெளியூர், வெளி மாநிலப் புண்ணியத் தலங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு உண்டாகும்.

## கடகம்

திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். தெய்வ பக்தி அதிகரிக்கும். எடுத்த செயலை வெற்றிகரமாக முடிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் உறவினர்களிடையே இருந்த கருத்துவேறுபாடு நீங்கி, சுமுகமான சூழ்நிலை உண்டாகும். சிலருக்கு புதிய வீடு, வாகனம் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். சிலருக்கு புண்ணியத் தலங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உண்டாகும். ஆனால், உடல்நலனில் கவனம் தேவைப்படுகிறது.

## சிம்மம்

பணவரவு கணிசமாக உயரும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதையும் சாதிக்கவேண்டும் என்ற மன உறுதி ஏற்படும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் ஏற்படும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்வீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். வாழ்க்கைத்துணைவழி உறவுகள் உங்கள் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வார்கள். அவர்கள் மத்தியில் உங்கள் கௌரவம் உயரும்.

## கன்னி

இந்த மாதம் மிகவும் மகிழ்ச்சியும் பல வகைகளிலும் வளர்ச்சியும் தரும் மாதமாக அமையும். புதிய முயற்சிகள் அனைத்துமே மிக எளிதாக வெற்றி அடையும். எதிர்பார்த்த பணவரவு கிடைப்பதுடன், எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகளும் ஏற்படக்கூடும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. பிரிந்திருந்த கணவன் – மனைவி ஒன்று சேருவார்கள். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். சுபநிகழ்ச்சிகளை திட்டமிட்டபடியே நடத்தி முடிப்பீர்கள்.

## துலாம்

அனைத்து விஷயங்களிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. கூடுமானவரை மற்றவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகளை அவர்கள் போக்கிலேயே விட்டுப்பிடிப்பது நல்லது. எந்த ஒரு செயலையும் ஒரு முறைக்குப் பலமுறை போராடித்தான் முடிக்கவேண்டி இருக்கும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பும் மரியாதையும் கூடும். அரசாங்க விவகாரங்கள் சாதகமாக முடியும். குருபகவானின் பார்வைகள் சாதகமாக இருப்பதால், திருமணம், வளைகாப்பு போன்ற சுபநிகழ்ச்சிகள் நல்லபடி நடைபெறும்.

## விருச்சிகம்

அனைத்து காரியங்களிலும் வெற்றி உண்டாகும். பணவரவு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். புதிய வாகனம் வாங்கும் யோகமும் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகளும் ஏற்படக்கூடும். தெய்வ பக்தியும் ஆன்மிகத்தில் நாட்டமும் அதிகரிக்கும். புண்ணியத் தலங்க ளுக்குச் சென்று வரும் வாய்ப்பும் ஏற்படும். பெண்களால் பொருள் சேர்க்கை உண்டாகும். ஆனாலும், உறவினர்களால் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் கூடுமானவரை அளவோடு பேசவும்.

## தனுசு

பணப்புழக்கம் கணிசமாக அதிகரிக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். முன்னேற்றத்துக்கான வழிவகைகள் பிறக்கும். பிரிந்திருந்த கணவன் – மனைவி ஒன்று சேருவீர்கள். சிலருக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். மாதப் பிற்பகுதியில் சிலருக்கு புது வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். மகளுக்கு நல்ல இடத்தில் வரன் அமையும். ஆனால், குடும்பத்தில் அவ்வப்போது சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

## மகரம்

அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். பணவரவு கணிசமாக உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் நிலவும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகையும், அதனால் மகிழ்ச்சியும் உண்டாகும். சிலருக்கு வீடு, மனை வாங்கும் யோகமும் உண்டாகும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். எதிரிகளின் தொல்லை இல்லாமல் போகும். எச்சரிக்கையாக இருக்கவும்.

## கும்பம்

பணவரவு திருப்தி தருவதாக இருக்கும். குடும்பத்தில் வசதி வாய்ப்புகள் பெருகும். வீட்டில் மகிழ்ச்சியும் நிம்மதியும் குடிகொள்ளும். பெண்களால் நன்மை உண்டாகும். உறவினர்களால் நன்மைகள் ஏற்படும். குடும்பத் தேவைகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். பெண்களால் நன்மை உண்டாகும். அரசாங்கக் காரியங்கள் இழுபறியாக இருந்தாலும் சாதகமாக முடியும்.

## மீனம்

பொறுமையுடன் இருக்கவேண்டிய மாதம். எந்த ஒரு காரியமும் ஒரு முறைக்குப் பலமுறை முயற்சி செய்த பிறகே முடியும். எதிலும் தடை தாமதங்கள் இருக்கவே செய்யும். வீண் விவாதங்களில் ஈடுபடவேண்டாம். தேவையற்ற அலைச்சலும், வாழ்க்கைத்துணையால் பிரச்சினைகளும் ஏற்படக் கூடும். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியங்கள் முடிவதில் தடை, தாமதம் ஏற்படக்கூடும். ஆனால், அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதில் பிரச்சினை எதுவும் இருக்காது. நவீன ரக மின்சார, மின்னணு சாதனங்களை வாங்குவீர்கள்.

HavenHill
REAL ESTATE

# Thinking of Selling? Sell Smart pay only 1% Commision.

**Selling your home is a big moment.**

That's why we focus on the most important things:
getting you the strongest result, with a smarter, fairer fee structure.

**With Sell Smart, you get:**

- Professional marketing
- Strategic buyer targeting
- Confident negotiation
- A premium, boutique experience

SELL SMART.
SAVE MORE.
ACHIEVE BETTER.



**Shagi Pathmanathan**
Founder / Director
**0413 076 585**
shagi@havenhillrealestate.com.au

**Yasantha De Silva**
Founder / Director
**0432 805 336**
yasantha@havenhillrealestate.com.au

Level 10, 14 Mason St, Dandenong VIC 3175
havenhillrealestate.com.au

Terms and Conditions apply*


EVERYTHING
YOU NEED
ALL IN ONE PLACE!
BEST SERVICES:
Cargo & Shipping Services
Groceries & Household Items
Spices Export & Import
Pooja Products
Boutique Dress & Saree Collection
Contact Us For Details
Sri Ayyappa Pvt LTD
+61 449 722 392
40 David street, Dandenong VIC 3175, Australia
FAST DELIVERY
ஆதவன்
Cargo Service
Australia to Sri Lanka
Sri Lanka to Australia
THIS WAY UP
ATHAVAN PRODUCTS
PARBOILED RICE
Jaffna CURRY POWDER
PREMIUM MOONG DAL (Roasted)
Soya Meat
CHILLI POWDER
ஸ்ரீ AYYAPPA
ATHAVAN